வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk

மலர் : 03 14.09.2022 புதன்கிழமை இதழ் : 279 பக்கங்கள் : 16




மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06

T.P: 011 236 2086

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 4433

076 284 4443

MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்

Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்

WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# இலங்கைமீது வலுவான தீர்மானம் அவசியம்!

## மனித உரிமைகள் பேரவைக்கு சர்வதேச அமைப்புகள் கடிதம்!

ஜெனிவா, செப்ரெம்பர் 14

**சர்வதேச சட்டத்தின் கீழான குற்றங்களுக்கு பொறுப்புக் கூறல், நாட்டில் தற்போது மோசமடைந்து வரும் மனித உரிமைகள் மீறல்கள் விடயங்களில் இலங்கைமீது மனித உரிமைகள் பேரவை வலுவான தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று உலகின் முன்னணி அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.**

சர்வதேச மன்னிப்பு சபை, ஃபோரம் ஆசியா, மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச சட்ட வல்லுநர்கள் ஆணைக்குழு ஆகிய உலகின் முன்னணி நான்கு மனித உரிமைகள் அமைப்புகள் மனித உரிமைகள் பேரவை - அதன் உறுப்பு நாடுகளுக்கு எழுதியுள்ள கடிதம் நேற்று வெளியிடப்பட்டது. அதில், மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி எழுதியுள்ள கடிதத்தில்,

கொடூரமான பயங்கரவாதத் தடுப்பு சட்டம்

15

## பால் புரைக்கேறி சிசு உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், செப். 14

தாய்ப் பால் புரைக்கேறியதில் பிறந்து நான்கு நாட்களேயான பெண் சிசு உயிரிழந்தது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இடம்பெற்றுள்ளது. இதில், மயிலிட்டி வடக்கு மயிலிட்டியை சேர்ந்த தம்பதியரின் சிசுவே இவ்வாறு தாய்ப் பால் புரைக்கேறி உயிரிழந்தது.

நேற்று முன்தினம் இரவு 8:45 மணியளவில் சிசுவுக்கு பால் கொடுத்த பின்னர் சிசுவை அவதானித்தபோது, சிசு அசைவற்று இருந்துள்ளது.

மருத்துவர்கள்

15

## செப்ரெம்பர்-19 விசேட விடுமுறை

கொழும்பு, செப். 14

எதிர்வரும் 19ஆம் திகதியை விசேட அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கை முன்னிட்டு, இந்த தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளதாக

15

## திருக்கோணேஸ்வரம் ஆலயத்தை காக்க அமைச்சர் டக்ளஸால் முடியும்!

### மறவன்புலவு சச்சிதானந்தன் நம்பிக்கை

யாழ்ப்பாணம், செப். 14

திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை காப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் முடியும் என்று ஈழத்து சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில்,

திருக்கோணேச்சரத்தை காப்பதற்குத் தந்தை செல்வா தலைமையில் அமைச்சர் திருச்செல்வம் எடுத்த முயற்சிகள் தோற்றுப்போக அதற்காக அவர் அமைச்சர் பதவியில் இருந்தே விலகினார் 1968இல்.

மன்னர் காலத்துக்குப் பின்பு

15

## 18 மணிநேர இடைவெளியில் விபத்துக்களில் எண்மர் பலி!

கொழும்பு, செப். 14

நாட்டில் நேற்று நண்பகல் 12 மணி வரையான 18 மணி நேரத்தில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 8 பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வவுனியா - புளியங்குளம் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

இதேபோன்று, மட்டக்களப்பு வவுணதீவு -

15

## மகசின் சிறைச்சாலையில் ஐவரின் நிலைமை மோசம்!

கொழும்பு, செப். 14

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் 13 பேர், தமது விடுதலையை வலியுறுத்தி கடந்த 6 ஆம் திகதியிலிருந்து கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். இவர்களில் 5 பேரின் நிலைமை மோசமடைந்ததைத் தொடர்ந்து மருத்துவமனையில் அவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தம்மைப் பிணையிலாவது விடுதலை செய்ய

15




## நடைபெற்றது இனப் படுகொலையே வலியுறுத்தி ஜெனிவாவில் போராட்டம்!

ஜெனிவா, செப். 14

இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலையே என்று வலியுறுத்தி ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் நேற்று முன்தினம் போராட்டம் இடம்பெற்றது.

ஐ. நா மனித உரிமை சபையின் முன்பாக அமைக்கப்பட்ட முருகதாசன் திடலில் இந்தப் போராட்டம் நடைபெற்றது. இதில், இனப் படுகொலையை விளக்கும் புகைப்படங்கள் கொண்ட 12 மீற்றர் நீள பதாகை அமைக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் தாயகத்திலிருந்து வருகைதந்த தமிழ் அரசியல் பிரதிநிதிகள் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையிடம் பல கோரிக்கைகளை கையளித்தனர்.

15

## கோட்டாபயவை விட ரணிலின் பதவி விலகல் அச்சமளிக்கும்!

### ஹிருணிகா பிரேமசந்திர சொல்கிறார்

கொழும்பு, செப். 14

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவி விலகல் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை விட மிகவும் அச்சமூட்டுவதாக அமையும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அணித் தலைவி ஹிருணிகா பிறேமசந்திர தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் வெளியேற்றம் விரைவில் நிகழும். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வெளியேற்றத்தைவிட இது மிகவும் பயமளிக்கும். அவர் உடனடியாக பதவி நீக்கப்பட்டு

15

## ஜெனிவா வந்தோர் பாதுகாப்பாக நாடு திரும்புவதை உறுதி செய்க!

### இலங்கையை வலியுறுத்தியது சுவிஸ்

ஜெனிவா, செப். 14

மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது அமர்வையொட்டி ஜெனிவா வந்து மனித உரிமைகள், அடிப்படை உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தவர்கள் பாதுகாப்பாக நாடு திரும்புவதற்கு இலங்கை அரசு உத்தரவாதமளிக்க வேண்டும் என்று சுவிற்சர்லாந்து நாட்டின் பிரதிநிதி டொமினிக் பர்க்லர் வலியுறுத்தினார்.

அமைதி வழியில் போராடியவர்கள் கைது

15

## இரு வாரங்களுக்கு ஒருமுறை இறக்குமதி தடை திருத்தப்படும்!

### அமைச்சரவை தீர்மானம்

கொழும்பு, செப். 14

அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக சில இறக்குமதிகளுக்கு விதிக்கப்பட்ட தடை இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் இது தொடர்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

நேற்றைய தினம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வரவிருப்பதை பற்றி எழுதியிருந்தேன்.

சிங்கள பத்திரிகை ஒன்றில் வெளிவந்திருந்த ஒரு பத்தியிலிருந்து பெற்ற தகவலை உங்களோடு பகிர்ந்துகொண்டிருந்தேன். அதுபற்றி நேற்றைய தினம் ஒரு தெற்கு நண்பருடன் பேசிக் கொண்டிருந்தபோது, அந்தச் செய்தியில் எத்தகைய உண்மை இருக்கிறது என்பதை அறிய அவரிடம் தகவல் கேட்டபோது, அவர் சொன்னார்: “அப்படித்தான் நானும் அறிகிறேன். ஆனால், அவர் மீண்டும் சகோதரர்களுடன் இணையாமல் தனிக்கட்சி தொடங்க யோசிப்பதாகத் தகவல்“ என்றார்.

இந்தத் தனிக்கட்சி விடயத்தை அறிந்தபோதுதான் அடுத்த பாராளுமன்றத்தை கற்பனை பண்ணிப்பார்க்க முடிந்தது. சுதந்திரக் கட்சியின் விருப்பத்துக்கு மாறாக அமைச்சரவையில் இடம்பிடித்துள்ள தற்போதைய விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவும் விரைவில் தனிக்கட்சி ஆரம்பிக்கப் போகிறாரென அறிவித்திருக்கிறார்.

சுதந்திரக் கட்சியில் ஜனநாயகம் இல்லை என்றும் மைத்திரிபால சிறிசேன சர்வாதிகாரிபோல செயல்படுகிறார் என்றும் குற்றம்சாட்டியுள்ள அவர் விரைவில் தான் தனிக்கட்சி ஆரம்பிக்கப் போகிறார் என்று தெரிவித்திதருக்கிறார்.

இப்படியே போனால் ஆள்ஆளுக்கு தனித்தனியாகக் கட்சிகளை தொடங்கிவிட்டு தனித்தோ அல்லது கூட்டணி அமைத்தோ இவர்கள் எல்லோரும் அடுத்த பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடக்கூடும். அப்படிப் போட்டியிட்டு பாராளுமன்றம் வந்த பின்னர் அவர்கள் தனித்தனியாக இயங்கத் தொடங்கினால், அடுத்த பாராளுமன்றில் இருநூற்று இருபத்தி ஐந்து எம். பிக்களும் தனித்தனிக் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்து வார்களோ? அதாவது இருநூற்று இருபத்தி ஐந்து கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தவார்களோ என்னவோ என்று எண்ணத் தோன்றியது.

பாராளுமன்றத்தில் நடந்த வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பின்போது அதாவது ரணில் விக்கிரமசிங்க தாக்கல் செய்திருந்த இடைக்கால வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பின் போது ரணிலை கவிழ்க்க பொதுஜன பெரமுனவில் முக்கிய “தலை” எடுத்த முயற்சியை நாமல் ராஜபக்ஷவின் துணையுடனேயே ரணில் “வெட்டி” ஆடினாரென இப்போது தெரியவந்திருக்கின்றது.

அந்த வாக்கெடுப்பில் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக நூற்று இருபது வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தபோதிலும், அன்று பெரமுனவில் இப்போதும் இருக்கும் நூற்றுப்பத்தொன்பது பேரில் நூற்றுப் பன்னிரண்டு பேர் மாத்திரமே பாராளுமன்றம் வந்திருந்தனர்.

அதாவது, பாராளுமன்றத்தில் பெரும்பான்மைக்கு தேவையான உறுப்பினர்களின் எண்ணிக்கை அன்றைய நாளில் வரவில்லை. ஆனால், சிறீ லங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் சுயேச்சை குழுவின் நான்கு உறுப்பினர்களும் வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்ததால் அரசாங்கத்தால் நூற்று இருபது என்ற பெரும்பான்மையை காட்ட முடிந்தது. ஆனால், தேர்தல் முடிவுகள் இரகசிய வாக்கெடுப்பு மூலம் முடிவு செய்யப்படுமானால் அப்படி இருந்திருக்காதாம்.

பொதுஜன பெரமுனவில் தற்போது நூற்றுப் பத்தொன்பது பேர் மாத்திரமே இருக்கின்றனர் எனவும் அதனை நூற்றி ஐந்தாகக் குறைத்து ரணில் விக்கிரமசிங்கவின் வரவு - செலவு திட்டத்துக்குப் பெரும்பான்மை இல்லை என்பதைக் காட்டுவது பஸில் ராஜபக்ஷவின் திட்டமாக இருந்ததாக அந்தச் செய்தி மேலும் தெரிவித்தது.

இதன் மூலம் அரசாங்கத்தின் அதிகாரம் தம்மிடமே இருப்பதாகக் காட்ட பொதுஜன பெரமுன திட்டமிட்டதாகவும் ஆனால், இதனை வெகு நாட்களுக்கு முன்பே புரிந்து கொண்ட ரணில், ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த நாமல் ராஜபக்ஷவை பயன்படுத்தி பஸிலின் திட்டத்தை சீர்குலைத்தாரெனவும் கொழும்பிலிருந்து கிடைத்த அந்தச் செய்தி மேலும் தெரிவித்தது.

இறுதியாக வரவு - செலவுத் திட்டத்துக்குக் கிடைத்த மொத்த வாக்குகளின் எண்ணிக்கையை நூற்றி இருபதாக உயர்த்துவதற்கு ஜனாதிபதியால் முடிந்தாலும், எதிர்வரும் காலத்தில் ரணிலுக்கு நெருக்கடியை கொடுக்க தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளப்படலாம் என்றும், எதிர்வரும் நவம்பர் மாதம் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை முறியடிக்க இப்போதிருந்தே காய் நகர்த்தப்படுவதாகவும் அந்த செய்தி மேலும் தெரிவித்தது.

எது எப்படி இருந்தாலும் அடுத்த பெப்ரவரி வரை பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ரணிலிடம் இல்லை என்பதால் அதுவரை கத்திமீது நடப்பதைத் தவிர வேறு வழியில்லை.

இதன்பின்னர், தேவைப்பட்டால் பாராளுமன்றத்தைக் கலைப்பேன் என்று மிரட்டிக்கொண்டே காலத்தைக் கடத்திவிடலாம். ஏனெனில், பொதுஜன முன்னணியில் பின்வரிசை உறுப்பினர்கள் இப்போது தேர்தலை சந்திக்க தயார் நிலையில் இல்லை.

அடுத்த தேர்தலில் தம்மால் வெற்றிபெறமுடியாது என்பதைத் தெரிந்து வைத்திருக்கும் அவர்கள் முடிந்தவரை பாராளுமனறத்தில் இருக்கவே விரும்புவார்கள்.

எனவே பெப்ரவரி வரை ரணிலுக்கு வேறு வழியில்லை.!

**- ஊர்க்குருவி**





# முதலாவது தமிழ் ஆயரின் சிலை யாழில் திறந்து வைக்கப்பட்டது!

யாழ்ப்பாணம், செப். 14

ரோமன் கத்தோலிக்க மதத்தின் முதலாவது தமிழ் ஆயரும் யாழ். மறை மாவட்டத்தின் முதலாவது ஆயருமான எமிலியானுஸ்பிள்ளையின் சிலை திறப்பு விழா நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை புனித மரியன்னை பேராலய வளாகத்தில் நடைபெற்றது.

யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்து கொண்டு, உருவச் சிலையை திரை நீக்கம் செய்து வைத்தார்.

யாழ். மறை மாவட்டத்தின் மூத்தகுருவும், சிலை அமைப்புக்கு நிதியுதவி அளித்தவருமான அருட்திரு இமானுவேல் விவரங்கள் அடங்கிய நினைவுக்கல்லை திறந்து வைத்தார்.

ஆயர் எமிலியானுஸ்பிள்ளையின் மறைவின் 50ஆவது ஆண்டு நிறைவில் முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்வில் குருக்கள், துறவிகள் இறைமக்களெனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

ஆயர் எமிலியானுஸ்பிள்ளையின் சிலையை யாழ்ப்பாணத்தை சேர்ந்த நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஆசிரியர் த. கபேஸ்சன், சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி ஆசிரியர் இ. கிருபாகரன் ஆகியோர் வடிவமைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 10ஆயிரம் உணவகங்கள் பூட்டு

கொழும்பு, செப். 14

ரொட்டி மா, முட்டை, இறைச்சி மற்றும் மீன் பற்றாக் குறையால் சுமார் 10,000 ஹோட்டல்கள் முற்றாக மூடப்பட்டுள்ளதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

இந்த பற்றாக்குறையால் அரசு நிறுவனங்கள் மற்றும் பள்ளிகளில் உள்ள சிற்றுண்டிச் சாலைகளில் பாதியளவு மூடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ரொட்டி மாவு, முட்டை, இறைச்சி மற்றும் மீன் தட்டுப்பாடு காரணமாக பல்வேறு நிகழ்வுகளுக்கான கேட்டரிங் சேவைகளும் கிட்டத்தட்ட நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

# நாணய நிதிய உடன்பாட்டை; மறைக்கும் அவசியம் இல்லை

கொழும்பு, செப். 14

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை மறைக்க வேண்டிய அவசியம் கிடையாது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அமைச்சரவைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரன மேற்கண்டவாறு கூறினார்.

இதன்படி, அமைச்சரவை, எதிர்க்கட்சித் தலைவர், கோப் மற்றும் கோபா உள்ளிட்ட நிதிக் குழுக்களின் தலைவர்களுக்கு குறித்த ஒப்பந்தம் முன்வைக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

அதனை மறைக்கவேண்டிய அவசியம் கிடையாது என்றும் அவை அனைத்தும் எதிர்காலத்தில் முன்வைக்கப்படும் என்றும் ரமேஷ் பத்திரன தெரிவித்தார். (அ)

# புளியங்குளம் விபத்தில் நேற்று ஒருவர் மரணம்!

வவுனியா, செப். 14

வவுனியா புளியங்குளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றது.

வவுனியா நகர் பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த ஹைஏஸ் ரக வாகனமும் எதிரே வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளும், புளியங்குளம் பாடசாலைக்கு முன்பாக மோதுண்டு விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். பஞ்சநாதன் குகேந்திரன் (வயது-49) என்ற நபரே மரணமடைந்தவராவார்.

சம்பவம் தொடர்பாக புளியங்குளம் பொலிசார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், செப். 14

ஈழத்து பதிப்பு இலக்கியப் பரப்பில் மிக முக்கியமானவராக அறியப்பட்ட நூலியலாளர் என். செல்வராஜாவின் ‘நூலகவியல் - 16’, “பெருந் தொகுப்பு”, “நான் கண்ட ஈழத்து நூலக ஆளுமைகள்” ஆகிய நூல்களின் அறிமுக விழா எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

சுன்னாகம் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் நூலக மண்டபத்தில் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

வலி. தெற்கு பிரதேச சபை தவிசாளர் க. தர்ஷன் தலைமையில் இடம்பெற உள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறீசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் கலந்துகொள்ளவுள்ளனர்.

நூலியலாளர் என். செல்வராஜா ஈழத்து புத்தகங்கள் பற்றிய விபரங்களை சர்வதேச நியமங்களின்படி தொகுத்து நூல்தேட்டம் என்ற பெயரில் வெளியிட்டு வருகிறார். இதுவரையில் 15 தொகுதிகளை வெளியிட்டிருக்கும் இவர் இப்போது 16ஆவது தொகுதியை வெளியிடுகிறார். ஒவ்வொரு தொகுதியிலும் 1000 புத்தகங்களின் விபரங்கள் பதியப்பட்டுள்ளன - என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
14.09.2022 புதன்கிழமை
பிலவ வருடம், ஆவணி 30

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# இந்தியாவின் அறிவிப்பு

மீண்டும் இந்தியா அதன் நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியிருக்கின்றது. அதேவேளை, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளில் காணப்படும் போதாமைகள் தொடர்பிலும் சுட்டிக்காட்டியிருக்கின்றது. ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடர் இடம்பெற்றுவரும் நிலையில் இலங்கை தொடர்பான உரையாடலின்போதே இந்தியா அதன் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருக்கின்றது. இந்தியாவின் அயல்நாடான இலங்கைத் தீவில் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் அதற்கு அரசியல் தீர்வு அவசியமானது என்பதையும் இந்தியா உறுதியாக வெளிப்படுத்தியிருக்கின்றது.

இணை அனுசரணை நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் அரசியல் தீர்வை வலியுறுத்தவில்லை. மாறாக, வழமையான சொற்களான நல்லிணக்கம், மனித உரிமைகள் மேம்பாடு என்னும் அடிப்படையிலேயே தங்களுடைய நிலைப்பாட்டை வெளிவுபடுத்தியிருக்கின்றன. அரசியல் தீர்வில்லாமல் நல்லிணக்கம் சாத்தியமில்லை என்னும் விடயம் இந்தியாவால் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதன் மூலம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வலியுறுத்தும் ஒரேயொரு நாடாக உலக அரங்கில் இந்தியா மட்டுமே இருக்கின்றது. மறுபுறும் அண்மைக்காலமாக தமிழ் பகுதிகளில் ஆர்வத்தைக் காண்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டுவரும் சீனா அதன் அரச சார்பு கொள்கையை மீளவும் உறுதிப்படுத்தியிருக்கின்றது.

நல்லிணக்கம் என்பதை அரசியல் தீர்வுக்கு வெளியில் தேடுவது தவறானது. இந்தியாவின் நிலைப்பாட்டை அமெரிக்கா உள்ளடங்கலான மேற்கு நாடுகளும் கைக்கொள்ள வேண்டியது அவசியமாகும். இந்தியா வலியுறுத்தியிருக்கும் 13ஆவது திருத்தச் சட்டத்தை ஓர் ஆரம்பப் புள்ளியாகக் கொள்ளும் அரசியல் தீர்வு விடயத்தில் மேற்குலகும் இந்தியாவும் ஒரு புள்ளியில் பணியாற்ற வேண்டும்.

மேற்கு நாடுகளின் குறிப்பாக அமெரிக்காவின் வழமையான அணுகுமுறைகள் இந்த விடயத்தில் பலனளிக்காது. வெறுமனே அரசியல் மறுசீரமைப்பு என்று குறிப்பிடுவதன் மூலம் மட்டும் விடயங்களை கையாள முடியாது. 2012இல், இலங்கையின் மீதான முதலாவது அழுத்தப் பிரேரணை கொண்டுவரப்பட்ட காலத்திலிருந்து இதுவரை கால மேற்குலகின் அணுகுமுறையின் மூலம் நல்லிணக்க முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. ஆனால், யுத்தத்துக்குப் பின்னரான காலப்பகுதியிலும் இலங்கை அரச இயந்திரத்தின் மேலாதிக்க சிந்தனையிலும் அணுகுமுறைகளிலும் எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை. தமிழர் தாயகப் பகுதியில் திட்டமிட்ட பௌத்த மேலாதிக்கத்தை திணிக்கும் முயற்சிகளை அரச இயந்திரம் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது. இதனை ஜெனிவா அழுத்தங்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை.

எனவே, இதுவரை கால மேற்குலகின் அணுகுமுறைகளால் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. அத்தோடு, ஒரு காத்திரமான அரசியல் தீர்வையும் கொண்டுவர முடியவில்லை. எனவே, இனியும் வழமையான சொற்களில் மேற்குலகம் நேரத்தை செலவிடுவதானது அர்த்தமற்றதாகும். ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசியல் யாப்புக்கான முயற்சிகளின் தோல்வியானது ஒரு தெளிவான செய்தியை சொல்லியிருக்கின்றது. அதாவது, புதிய அரசியல் யாப்பு ஒன்றை கொண்டு வருவது முயலில் கொம்பை தேடும் முயற்சிக்கு ஒப்பானது. எனவே, அரசியல் தீர்வின்றி நல்லிணக்கம் இலங்கைத் தீவில் சாத்தியப்படாது.

இந்தப் பின்புலத்தில் இந்தியா வலியுறுத்துவது போன்று, 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதுடன் மாகாண சபைத் தேர்தலை நடத்தி அதனை சுயாதீனமாக இயங்கச் செய்யும் நடவடிக்கைதான் நல்லிணக்கத்துக்கான ஆரம்பமாக இருக்க முடியும். எனவே, அமெரிக்காவும் இலங்கைத் தீவின் பொறுப்புக் கூறலில் கரிசனை காண்பித்துவரும் கனடா, பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை இந்தியாவுடன் ஒரு நேர்கோட்டில் இணைந்து பயணிப்பதன் மூலம்தான் இலங்கைத் தீவின் நல்லிணக்கத்துக்கு உண்மையான பங்களிப்பை வழங்க முடியும். அவ்வாறில்லாது விட்டால், அனைத்து முன்னெடுப்புக்களும் வெறும் உதட்டளவு ஆர்வங்களாகவே சுருங்கிப் போகும்.

# ஐ. சி. சியில் இலங்கையை பாரப்படுத்த கனடா நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## *கனடிய தமிழ் அமைப்புகள் கூட்டாக பிரதமரிடம் கோரிக்கை*

*ஒன்ராறியோ, செப். 14*



*ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தற்போதைய அமர்வில் இலங்கையை சர்வதேச குற்றவியில் நீதிமன்றத்தில் (ஐ. சி. சி) பாரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கனடா பிரதமர் எடுக்கவேண்டும் என்று கனடாவின் பல அமைப்புகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.*

*கனடாவின் தமிழ் அமைப்புகளும் ஒன்ராறியோ மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதியும் கூட்டாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுடக்கு கடிதமொன்றை எழுதியுள்ளனர்.*

*அதில், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பான முதன்மை நாடுகளின் குழுவில் கனடா காணப்படுவதால், கனடாவை சேர்ந்த குழுக்களும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளும் மனித உரிமைகள் பேரவையின் தற்போதைய அமர்வு குறித்தும் யுத்த குற்றங்கள் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலைகளுக்குப் பொறுப்புக் கூறுவதில் தொடர்ச்சியாக தோல்வியேற்படுவது குறித்த எங்கள் கரிசனையை தெரியப்படுத்துவதற்காக உங்களுக்கு இந்த கடிதத்தை எழுதுகின்றோம்.*

*இலங்கை தமிழ் சமூகத்தின் பெரும்பான்மையான தரப்பினரும் இலங்கையை ஐ. நா. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தவேண்டிய அவசர நிலைமை தொடர்பில் இலங்கை தொடர்பான முதன்மை நாடுகளை தொடர்புகொண்டுள்ளனர்.*

*ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் இந்த அமர்வில் ஐ. நா. தீர்மானங்களை இலங்கை நிறைவேற்றியுள்ளதா என்பது குறித்து மதிப்பிடப்படும். 2021ஆம் ஆண்டு மார்ச் மாத அறிக்கையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் பரிந்துரைத்தபடி மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் நான்கு முன்னாள் ஆணையாளர்களும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு அறிக்கைகளை வெளியிட்ட 9 அறிக்கையாளர்களும் இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் நிபுணர்கள் குழுவில் இடம்பெற்றிருந்த அனைத்து உறுப்பினர்களும் பரிந்துரைத்தபடி இலங்கயை சர்வதேச நீதிமன்றத்தின் முன்னிலையில் பாரப்படுத்துமாறு வேண்டுகோள் விடுக்கும் வலுவான தீர்மானத்தை 13 வருடங்களுக்கு முன்னர் குற்றங்களிற்கு பொறுப்புக்கூறுவதற்காக சமர்ப்பிக்குமாறு நாங்கள் உங்களை கேட்டுக்கொள்கின்றோம்.*

*இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னிலையில் பாரப்படுத்துமாறு வேண்டுகோள் விடுக்கும் நடவடிக்கைக்கு குறைவான நடவடிக்கை எதுவும் எங்கள் மக்கள் எதிர்கொண்ட பெரும் அநீதிக்கு நீதியை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளை இல்லாமல் செய்துவிடும் என கனடியர்களாகிய நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்.*

*இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னிலையில் பாரப்படுத்துமாறு வேண்டுகோள் விடுக்கும் நடவடிக்கைக்கு குறைவான நடவடிக்கைகள் இலங்கை அதிகாரிகளும் பாதுகாப்பு படையினரும் எந்த தயக்கமும் இன்றி இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக பெரும்அநீதிகளில் ஈடுபடும் நிலையை ஏற்படுத்தும் - என்றுள்ளது. (ஐ)*

# 500 லீற்றர் மண்ணெண்ணெயுடன் பொலிஸாரிடம் சிக்கினர் இருவர்!

*திருமலை, செப். 14*

*திருகோணமலை-கிண்ணியாவில் அனுமதியின்றி மண்ணெண்ணெய் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.*

*கல்முனையிலிருந்து கிண்ணியா நோக்கி அனுமதியின்றி லொறியொன்றில் மண்ணெண்ணெய் ஏற்றிச்சென்ற குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் இருவர் கைது செய்யப்பட்டனர்.*

*கிண்ணியா-உப்பாறு பகுதியில் பொலிஸாரின் சோதனைச் சாவடியில் குறித்த வாகனத்தை சோதனைக்குட்படுத்தியபோதே மண்ணெண்ணெய் கைப்பற்றப்பட்டது.*

*இதன்போது 500 லீற்றர் மண்ணெண்ணெய் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

*கைது செய்யப்பட்ட இருவரும் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்ப்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.(அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**

எதிர்பார்ப்பு நிறைவேறும். செயல்களில் ஏற்பட்ட நெருக்கடி விலகும். நினைத்ததை அடைவீர்கள். செலவுகளால் ஏற்பட்ட சங்கடம் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் உண்டாகும்.

**இடபம்**

எதிர்பாராத செலவுகளை இன்று சந்திப்பீர்கள். உங்கள் முயற்சிகள் இழுபறியாகும். உங்கள் செயல்களில் இன்று கவனம் தேவை. அலைச்சல் அதிகரிக்கும். தொழிலில் லாபம் ஏற்படும்.

**மிதுனம்**

உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். முயற்சிகளில் லாபம் காண்பீர்கள். யோகமான நாள்.பழைய கடன் வசூலாகும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். நிதி நிலை உயரும். அரசு வழி முயற்சி பலித்தமாகும்.

**கடகம்**

இழுபறியாக இருந்த முயற்சி இன்று நிறைவேறும். பிள்ளைகளுக்காக மேற்கொண்ட முயற்சி நிறைவேறும். எதிர்கால வாழ்க்கைக்கான சிந்தனை மேலோங்கும். அமைதிக்கான நாள்.

**சிம்மம்**

இரு நாட்களாக இருந்த சங்கடம் இன்று விலகும். உங்கள் முயற்சிகள் நிறைவேறும். புதிய முயற்சி பலன்தரும். நெருக்கடிகள் விலகும். நன்மையான நாள். லாபம் காண்பீர்கள்.

**கன்னி**

மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். உங்கள் செயல்களில் இன்று கவனம் தேவை. வீண் அலைச்சல்களும் பகையும் ஏற்படும். செயல்களில் அதிக கவனம் தேவை.

**துலாம்**

உங்கள் வேலைகளை தனியாக முடித்துக்காட்டுவீர். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பிறரின் பாசத்திற்கு கட்டுப்படுவீர்கள். தம்பதிகளுக்குள் இருந்த பிரச்னைகள் முடிவிற்கு வரும். மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**விருட்சிகம்**

உங்கள் செயல்களில் இருந்த தடை விலகும். நினைத்ததை அடைந்து மகிழ்வீர்கள். திட்டமிட்டிருந்த வேலைகளில் கவனம் செலுத்துவீர்கள். உங்கள் முயற்சி பலிக்கும். துணிச்சலுடன் செயல்படுவீர்கள்.

**தனுசு**

தடைகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். அரசு வழியில் மேற்கொண்ட முயற்சி வெற்றியாகும். பழைய நட்புகளால் இன்று சில பிரச்னைகளை சந்திக்க நேரும். எச்சரிக்கைத் தேவை. உங்கள் செல்வாக்கு உயரும்.

**மகரம்**

கவனத்துடன் செயல்பட்டு தொழிலில் லாபம் காண வேண்டிய நாள். வழக்கு எதிர்மறையான பலனை வழங்கும். எண்ணத்தை வேறு வகையில் சிதற விட வேண்டாம். செயல்களில் பாதிப்பு உண்டாகும்.

**கும்பம்**

உங்கள் முயற்சி பலிக்கும். மற்றவருக்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள் அதன் வழியே நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள். துணிச்சல் அதிகரிக்கும். உங்கள் முயற்சிகளில் லாபம் உண்டாகும்.

**மீனம்**

பணம் பொருள்களைக் கையாளுவதில் கவனம் தேவை. எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய நாள். பணிபுரியும் இடத்தில் உங்கள் வார்த்தைகளால் சங்கடத்தை சந்திப்பீர்கள்.

# இலங்கை இன பிரச்னை; தனித் தமிழீழமே தீர்வு!

## இதையே பாட்டாளி மக்கள் கட்சி நம்புகிறது

சென்னை, செப். 14

“இலங்கை இனச்சிக்கலுக்கு தனித் தமிழீழம் மட்டுமே தீர்வு என்று பாட்டாளி மக்கள் கட்சி உறுதியாக நம்புகிறது. ஆனால், அதற்கான அரசியல் மற்றும் சட்டரீதியான பயணம் மிக நீண்டது என்பதால், அதுவரை ஈழத்தில் வாழும் தமிழர்கள் கண்ணியமாகவும், சுதந்திரமாகவும் வாழ வகை செய்ய வேண்டும்.” என்று பாட்டாளி மக்கள் கட்சி (பா. ம. க.) நிறுவுநர் ச. ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் வாழும் ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான நடவடிக்கைகளை சிங்கள ஆட்சியாளர்கள் மேற்கொள்ளவில்லை. இனியும் தாமதிக்காமல் அதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் இந்தியா வலியுறுத்தியுள்ளது. ஈழத் தமிழர்களுக்கு நீதி வழங்குவதில் இந்தியாவின் நிலை வரவேற்கத்தக்கது. ஆனால், போதுமானதல்ல.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமை பேரவையின் 51ஆவது கூட்டத்தில் நேற்று உரையாற்றிய இந்திய தூதர், “ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் வழங்குவதற்காக இலங்கை அரசமைப்பு சட்டத்தில் செய்யப்பட்ட 13ஆவது திருத்தத்தை முழுமையாக செயல்படுத்துதல், மாகாண சபைகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல், நீண்டகாலமாக தேர்தல் நடத்தப்படாமல் இருக்கும் மாகாண சபைகளுக்கு உடனே தேர்தல் நடத்துதல் ஆகியவற்றின் மூலம் ஈழத்தமிழர் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணப்படும் என்று அளித்திருந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில், அளவிடக் கூடிய முன்னேற்றம் எதையும் இலங்கை அரசு எட்டவில்லை” என்று குற்றஞ்சாட்டினார்.

ஒருங்கிணைந்த இலங்கைக்குள் தமிழர்களுக்கு நீதி, அமைதி, சமத்துவம் மற்றும் கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்ய வேண்டும் என்பதுதான் இந்தியாவின் நிலைப்பாடு. இதை இலங்கை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கையில் சிங்களர்கள் மட்டுமே ஆட்சிக்கு வர முடியும் இலங்கை ஆட்சியாளர்களின் மனதில் இருந்து சிங்கள பேரினவாத உணர்வையும், தமிழர்கள் வெறுப்பு மனநிலையையும் அகற்ற முடியாது என்ற சூழலில் இலங்கை இனச்சிக்கலுக்கு தனித் தமிழீழம் மட்டுமே தீர்வு என்று பாட்டாளி மக்கள் கட்சி உறுதியாக நம்புகிறது. ஆனால், அதற்கான அரசியல் மற்றும் சட்டரீதியான பயணம் மிக நீண்டது என்பதால், அதுவரை ஈழத்தில் வாழும் தமிழர்கள் கண்ணியமாகவும், சுதந்திரமாகவும் வாழ வகை செய்ய வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பெருங்கடமை இந்தியாவுக்கு உண்டு என்று பா.ம.க. தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இத்தகைய சூழலில் ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என ஐ.நா.வில் இந்தியா வலியுறுத்தியிருப்பது மனநிறைவை அளிக்கிறது.

ஆனால், இந்த வலியுறுத்தல் மட்டுமே ஈழத்தமிழர்களுக்கு அதிகாரத்தை பெற்றுத் தந்து விடாது என்பதை இந்தியா உணர வேண்டும். ஈழத்தமிழர்களுக்கு ஓரளவாவது அதிகாரத்தை வழங்குவதற்கான 13ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தம், 1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து செய்யப்பட்டதாகும். இந்தியா நினைத்திருந்தால் 13ஆவது அரசமைப்பு சட்டத் திருத்தத்தை அடுத்த சில ஆண்டுகளில் செயல்படுத்தி தமிழர்களுக்கு அதிகாரத்தை பெற்றுக் கொடுத்திருக்க முடியும். ஆனால், அதன்பின் 35 ஆண்டுகள் ஆகியும் இதுவரை எந்த முன்னேற்றமும் இல்லை. அரைகுறை அதிகாரங்களுடன் ஏற்படுத்தப்பட்ட மாகாண அவைகளும் முடக்கப்பட்டு விட்டன. வடக்கு - கிழக்கு மாநிலங்களின் இணைப்பும் ரத்து செய்யப்பட்டு விட்டது. இப்படியாக ஈழத் தமிழர்களுக்கு அதிகாரம் வழங்குவதற்கான இந்தியாவின் முயற்சி ஒரு செ.மீ கூட நகராமல் முடங்கிக் கிடக்கிறது.

சர்வதேச அவைகளிலும், இரு தரப்பு பேச்சுகளின் போதும், 13ஆவது அரசமைப்புச் சட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று இந்தியா இதுவரை நூறு முறை வலியுறுத்தியிருக்கும். இப்போது 101ஆவது முறையாக வலியுறுத்துவதால் மட்டும் எந்த பயனும் ஏற்பட்டு விடாது. மாறாக, இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து ஈழத்தமிழர்களுக்கு குறைந்தபட்ச அதிகாரத்தையாவது பெற்றுத்தர வேண்டும்.

கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை, அதன் அடிப்படைத் தேவைகளுக்குக்கூட இந்தியாவைத் தான் நம்பியிருக்கிறது. இத்தகைய சூழலில், 13 ஆவது அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தின் அம்சங்களை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தொடங்க வேண்டும். அவற்றில் ஏற்படும் முன்னேற்றங்களின் அடிப்படையில் தான் உதவிகளை வழங்க முடியும் என்று நிபந்தனை விதிப்பதன் மூலம் ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் பெற்றுத் தர இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஐ.நா. மனித உரிமை பேரவையில் ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என வலியுறுத்திய இந்தியா, அங்கு நடைபெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகளுக்கு காரணமானவர்களை தண்டிப்பது குறித்து எந்த கருத்தும் தெரிவிக்காதது ஏமாற்றமளிக்கிறது. இலங்கை இனப்படுகொலைகள் நிகழ்ந்து 13 ஆண்டுகள் ஆகியும் அதற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படாததை ஏற்க முடியாது - என்றுள்ளது. (ஐ)

# அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர்கள் வீட்டில் லஞ்ச ஒழிப்பு பிரிவு தேடுதல்!

சென்னை, செப். 14

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் எஸ். பி. வேலுமணி, விஜயபாஸ்கர் வீடுகளில் லஞ்ச ஒழிப்பு துறையினர் தேடுதல் நடத்தினர்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் சென்னை, கோவை மாநகராட்சிகளில் பல்வேறு பணிகளுக்கு ஒப்பந்தம் கோரியதில் முறைகேடு நடந்ததாக கூறி, முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணிக்கு எதிராக வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றில் வழக்குகள் தொடரப்பட்டன.

இதை அடிப்படையாக வைத்து கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் முன்னாள் அமைச்சர் எஸ். பி வேலுமணிக்கு சொந்தமான வீடு அலுவலகங்களில் சோதனை நடத்தப்பட்டது. 60 இடங்களில் நடத்தப்பட்ட சோதனையை தொடர்ந்து மொத்தம் எஸ். பி வேலுமணி உட்பட 17 பேர் மீது வழக்கு பதியப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவரின் வீட்டிலும், முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கருக்கு சொந்தமான 13 இடங்களிலும் லஞ்ச ஒழிப்பு துறையினர் நேற்று சோதனைகளில் ஈடுபட்டனர். (ஐ)

# சிகிரியா கோட்டை அல்ல பூங்காவாக பயன்பட்டது!

## சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர்

கொழும்பு, செப். 14

சிகிரியா ஒரு கோட்டை அல்ல எனவும், அதனை பூங்காவாக பயன்படுத்தியுள்ளதாக ஆய்வுகள் உறுதி செய்துள்ளதாகவும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் சூலாநந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற வைபவ மொன்றில் கலந்து கொண்டபோது அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிகிரியாவை சுற்றுலா மையம் என உலகமே அறியும். எனினும் சிகிரியா தொடர்பான சரியான தகவல்கள் உலகுக்கு செல்லவில்லை.

உலக புனித சுற்றுலா கலாசார மையம் என்று சிகிரியாவை பெயரிட்டாலும் அதற்கான முறையான அமைப்பு இல்லை. எனவே அதனை எப்படி செய்வது என்று விவாதிக்கவேண்டும். தொல்லியல் திணைக்களம் மற்றும் கலாசார மைய யுனிசெவ் அதிகாரிகள் அனைவரின் பங்குபற்றலுடன் சாதகமானதொரு கலந்துரையாடல் இடம்பெற்றது.

நாம் அனைவரும் சிகிரியாவை கோட்டை என நினைத்து சிகிரியாவுக்கு செல்கிறோம். சிகிரியா கோட்டை என்றால் ஏன் இவ்வளவு குளங்கள், அழகான மலர் தோட்டங்கள் இருக்கின்றன?

எனவே, சிகிரியா ஒரு கோட்டை அல்ல, அது ஒரு அழகான ஓய்வு பூங்கா. பேராதனை போலவே, இது அழகுக்காகவும், ஓய்வெடுக்கவும் கூடிய ஓர் இடமாகும். பண்டைய காலத்தில் மன்னரால் கட்டப்பட்ட ஓய்வு பூங்காவாகும். இது தொடர்பான முழுமையான ஆய்வுகள் மூலம் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது-என்றார்.

இதேவேளை, இலங்கைக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக புதிய மென்பொருள் ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

# காணாமற்போனோர் விடயத்தில் சர்வதேச விசாரணையே தேவை!

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவில் வலியுறுத்து

முல்லைத்தீவு,செப்.14

**ஜெனிவாவில் நேற்று முன் தினம் ஐ.நா. மனித உரிமை பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடரில் கருத்து தெரிவித்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் கருத்துக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கடும் கண்டனம் வெளியிட்டனர்.**

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் சர்வதேச விசாரணையே தேவை என முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளவர்களின் உறவுகள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளவர்களின் உறவுகள் சங்கத் தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி மற்றும் செயலாளர் பிரபாகரன் றஞ்சனா ஆகியோர் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமான நிலையில் அங்கு இலங்கை தொடர்பான விடயத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது விடயம் தொடர்பில் சர்வதேச விசாரணையை தொடர்ச்சியாக கோரி வரும் எமக்கு சர்வதேச விசாரணையை வலியுறுத்தி எந்த விடயமும் முன்வைக்கப்படாமையானது கவலையளிக்கிறது. இதேவேளை இந்த கூட்டத்தொடரில் சர்வதேச விசாரணையை தொடர்பான தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டும்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட தரப்புக்களாக நாம் இன்று 13 ஆண்டுகளாக போராடி எந்த தீர்வும் இல்லாது சர்வதேச விசாரணையை வலியுறுத்தி ஆரம்பித்த தொடர்ச்சியான போராட்டம் இன்று 2015 ஆவது நாளாக தொடர்கிறது. இந் நிலையில் ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 51 ஆவது கூட்டத் தொடரில் கருத்து தெரிவித்த இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் கருத்தானது எமது உணர்வுகளை புறந்தள்ளி அரசை பாதுகாப்பதாக அமைந்துள்ளதோடு குறித்த கருத்துக்கு கடும் கண்டனத்தையும் தெரிவிக்கின்றோம்-என்றனர். (அ)

# பெண்களே இருண்ட நாட்டுக்கு வெளிச்சம் கொண்டு வரமுடியும்!

## கூறுகின்றார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, செப். 14

இருளால் சூழ்ந்த நாட்டுக்கு வெளிச்சத்தை கொண்டு வருவதில் பெரும் பங்கு பெண்களுக்கே உண்டு என தெரி வித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, 25 வீத பெண் பிரதிநிதித்துவம் கட்டாயம் இடம்பெறவேண்டிய தொன்று எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களத்தின் ஏற்பாட்டில், பெப்ரல் அமைப்பின் முன்நிலை அனுசரணையில், ஜனநாயகம், தலைமைத்துவம் மற்றும் பெண்கள் எனும் கருப்பொருளில் இடம்பெற்ற விசேட மக்கள் சேவை நிகழ்ச்சியில் நேற்று முன் தினம் கலந்துகொண்டு உரையாற்றுகையிலையே எதிர்க் கட்சித் தலைவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்காலத்தில் பெண்கள் பல சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர். தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஊட்டச்சத்து குறைபாடு உள்ளிட்ட கடுமையான பல பிரச்னைகளை அவர்கள் எதிர்கொள்கின்றனர்.

மனித வாழ்வில் பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றில் பெரும் பங்கு வகிப்பது பெண்களே. அவர்கள் ஆற்றும் பங்கு அளவிட முடியாதது-என்றார். (அ)

# பொருளாதார மீளெழுச்சி குறித்த அமைச்சரவை உப குழு நியமனம்

கொழும்பு, செப். 14

பொருளாதார மீளெழுச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பில் விரைந்து தீர்மானங்களை மேற்கொள்வதற்காக அமைச்சரவை உப குழுவொன்றினை நியமிப்பதற்காக முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கே அமைச்சரவை இவ்வாறு அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய, ஐந்து பேர் அடங்கிய அமைச்சரவை உபகுழுவிற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.குறித்த அமைச்சரவை உபகுழுவில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவை அமைச்சர்களும் உள்ளடங்குகின்றனர்.

பொருளாதார மீளெழுச்சி மற்றும் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படும் முன்னுரிமை தீர்மானங்களை அங்கீகரிக்கவும் இனங்காண்பதற்கும் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பூங்காவின் மின்சார வேலியின் மின்கலங்கள் திருடியவர் கைது!

கொழும்பு, செப். 14

ரிதியகம சபாரி பூங்காவின் மின்சார வேலியின் நான்கு மின்கலங்களை திருடிய குற்றச்சாட்டின் பேரில், ரிதியகம சபாரி பூங்காவின் நிரந்தர ஊழியர் ஒருவரை கைது செய்துள்ளதாக அம்பலாந் தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

சூரிய சக்தியில் இயங்கும் மின்சார வேலி பூங்கா சபாரி யானைகளை பூங்காவுக்குள் வைத்திருப்பதோடு காட்டு யானைகள் பூங்காவுக்குள் நுழைவதையும் தடுக்கிறது.

வேலியில் பொருத்தப்பட்டிருந்த மிகவும் பெறுமதியான நான்கு மின்கலங்கள் திருடப்பட்டுள்ளதாக அம்பலாந்தோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதன் பேரில் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

அதன்படி, பொலிஸார் நடத்திய விசாரணையில், சபாரி பூங்கா அமைந்துள்ள அதே பகுதியில் வசிக்கும் யானை பராமரிப்பாளர் ஒருவரின் வீட்டில் இருந்து நான்கு மின்கலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

கைப்பற்றப்பட்ட நான்கு மின்கலன் களுடன் சந்தேகநபர் அம்பாந்தோட்டை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப் படவுள்ளார். (அ)

# வன ஜீவராசிகள் அமைச்சரின் வாகனம் மோதி மான் மரணம்!

கொழும்பு, செப். 14

உடவளவை தேசிய பூங்காவுக்கு விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மகிந்த அமரவீர விஜயம் செய்தபோது, மான் ஒன்று அவரது வாகனத்தில் மோதி உயிரிழந்துள்ளது.

பூங்காவில் வாகனத்தை அதிவேகமாக செலுத்தியதாலும், சாரதிக்கு வாகனத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போனதாலும் வாகனம் மான் மீது மோதியதுடன் வாகனத்தின் கண்ணாடியும் பலத்த சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் அமைச்சர் மகிந்த அமரவீர தேசிய பூங்கா எல்லைக்கு வெளியே இவ்விபத்து நடந்ததாக கூறியுள்ளார்.

உடவளவை தேசிய பூங்கா வட்டாரத்தின் தகவல்களின்படி, பூங்காவுக்குள் இச்சம்பவம் நடந்துள்ளது.

மேலும், மாலை 6 மணிக்கு மேல் பூங்காவுக்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், இரவு 8 மணியளவில் இந்த விபத்து நடந்துள்ளதாகவும் இரவு 11 மணியளவில் வாகனம் பூங்காவிலிருந்து வெளியே வந்ததாகவும் ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# வெள்ளவத்தை கடலில் நடமாடும் 40 முதலைகள்

கொழும்பு, செப். 14

வெள்ளவத்தை கடற்பகுதியில் 40 முதலைகள் சுற்றி திரிவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கின்ரோஸ் உயிர்காக்கும் நிறுவனத்தில் பணிபுரியும் திவங்க பெர்னாண்டோ என்பவர் வெள்ளவத்தைக் கடலில் நீராடும்போது முதலைக் குட்டியொன்றை பிடித்துள்ளார். குறித்த முதலைக் குட்டியை வன விலங்கு அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளார்.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது, சவோய் சினிமாவுக்கு அருகில் உள்ள கால்வாயில் நான்கு பெரிய முதலைகளை அவதானிக்கப்பட்ட நிலையில், வெள்ளவத்தை கடற்பகுதியில் 40 முதலைகளை கண்டுபிடித்துள்ளனர்.

இந்த முதலை அச்சுறுத்தல் குறித்து கின்ரோஸ் உயிர்காப்பு நிறுவனம் வன விலங்கு அதிகாரிகளிடம் தெரிவித்தும் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப் படுகின்றது.

இதனால் கடலில் குளிப்பதும் ஆபத்தாக மாறியுள்ளது. கடந்த வருடம் தெஹிவளையில் மீனவர் ஒருவர் முதலையால் தாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் கடலில் குளிக்க செல்லும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (அ)

# மன்னார் மீனவர்கள் தொடர்ந்தும் பாதிப்பு

## சமாசத்தின் செயலாளர் குற்றச்சாட்டு

**மன்னார், செப். 14**

**மன்னார் தீவு பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மண் அகழ்வு காரணமாக மீனவர்கள் எவ்வாறான பாதிப்புக்களை சந்திக்கின்றார்களோ அந்த பாதிப்புகளையே மன்னார் ஓலைத்தொடுவாய் பகுதியில் முன்னெடுக்கப்பட உள்ள இறால் வளர்ப்புப் பண்ணையினாலும் மீனவர்கள் பாதிப்பை எதிர்நோக்குவார்கள் என மன்னார் மாவட்ட மீனவர் சங்க சமாசத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.**

மன்னாரில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் வழங்கப்படும் பண்ணை வளர்ப்புக்கு குறிப்பாக கடலட்டை, மீன், இறால் வளர்ப்பு போன்றவற்றிற்கு வழங்கப்படுகின்ற அரச காணிகளாக இருந்தாலும் சரி, தனியார் காணிகளாக இருந்தாலும் சரி நாங்கள் ஏற்கனவே குறித்த வளர்ப்புத் திட்டங்களுக்கு எதிரானவர்கள் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆனால் குறித்த வளர்ப்பு திட்டம் வழங்கப்பட்ட முறையில் நிறைய முறைக்கேடுகள் காணப்படுகின்றன. ஆரம்பத்தில் சீனக் கம்பனிகளுக்கு வழங்கப்படுவதாக கூறப்பட்டு மீனவர்களின் எதிர்ப்பு காரணமாக குறித்த பகுதி மீனவர்களுக்கு குறித்த திட்டத்தை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை



முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதனை நாங்கள் வரவேற்கிறோம். குறிப்பாக மன்னாரில் இலுப்பைக்கடவை தொடக்கம் தேவன்பிட்டி வரையிலான சுமார் 200 க்கும் மேற்பட்ட ஏக்கர் காணிகள் இன்று மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் இலுப்பைக்கடவை உள்ளிட்ட சில கிராமங்களில் மீனவ மக்களின் எதிர்ப்பு காரணமாக குறித்த நடவடிக்கை தடைப்பட்டுள்ளது.

மீனவர்கள் எதிர் காலத்தில் கடலை மட்டும் நம்பி இருக்காது கரையோரங்களிலும் தமது வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கு அமைவாக குறித்த பண்ணை திட்டங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

ஆனால் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முகவர்கள் யார்?, வெளிநாட்டு தலையீடுகள் இருக்கிறதா?, அல்லது வெளிநாட்டு கம்பனிகள் உள் வாங்கப்பட்டுள்ளதா? உள்ளிட்ட கருத்துக்கள் வெளியாகி உள்ளன.

கடலில் பிடிக்கப்படுகின்ற 75 கிராமுக்கு குறைவான அட்டைகளைப் பெற்று அதனை பண்ணைகளில் விட்டால் அந்த அட்டைகள் பெருகி உற்பத்தி யாகும் என்பதில் உண்மை.

எனினும் அந்த அந்த கிராம மீனவர்கள் நலன் பெறவேண்டுமாக இருந்தால் அரசு குறித்த திட்டத்தை குறிப்பிட்ட கிராம மீனவர்களுக்கு வழங்க வேண்டும். மாறாக குறித்த திட்டத்தை வெளி மாவட் டத்திற்கு,வெளி நாடுகளுக்கும் வழங்குவதை நிறுத்தவேண்டும். -என்றார்.(அ)




# அரசியல் தீர்வை வலியுறுத்தி கிளிநொச்சியில் போராட்டம்!

*கிளிநொச்சி, செப். 14*

வடக்கு-கிழக்கு சிவில் சமூகத்தினரால் முன்னெடுக்கப்படும் 100 நாள் போராட்டத்தின் 44 ஆவது நாள் போராட்டம் நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

வடக்கு-கிழக்கு மக்களின் அடிப்படை உரிமைகளை பெற்றுத்தர வேண்டும் எனக் கோரிய குறித்த போராட்டம் மன்னார் மாவட்டத்தில் ஆரம்பமாகி 44 ஆவது நாளான நேற்று கிளிநொச்சி கோரக்கன் கட்டுப் பிரதேசத்தில் இடம்பெற்றது. வடக்கு-கிழக்கு மக்களுக்கு கௌரவமான தீர்வு வேண்டும் என வலியுறுத்தி இந்த அமைதி போராட்டம் இடம்பெற்றது. (அ)



# வெளிநாட்டு வருமானத்தை ஈட்டும் ராஜங்கனை வாழை விவசாயிகள்

*கொழும்பு, செப். 14*

உலக வங்கியின் உதவியின் கீழ் விவசாய அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் மூலம் ராஜங்கனையில் வாழைச் செய்கைத் திட்டம் தற்போது மிகவும் வெற்றியடைந்து நாட்டுக்கு விலைமதிப்பற்ற வெளிநாட்டு வருவாயைக் கொண்டு வந்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த அம்புல் (புளிப்பு) வாழைச் செய்கை சர்வதேச சந்தையை இலக்காகக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், வாழைச்செய்கை, அறுவடை, பொதியிடல் போன்ற சகல செயற்பாடுகளையும் சர்வதேச தரத்திற்கமைய மேற்கொள்வதற்காக விவசாயிகளுக்கு விஞ்ஞான தொழில்நுட்பப் பயிற்சிகளையும் வழங்கியுள்ளது.

விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர அண்மையில் ராஜாங்கனைக்கு விஜயம் செய்து அம்புல் வாழை திட்டத்தின் முன்னேற்றத்தை பார்வையிட்டார். இதில் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க, திட்டப் பணிப்பாளர் கலாநிதி ரொஹான் விஜேகோன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ராஜங்கனை வாழைத் தோட்டம் வருடாந்தம் 152,264 கிலோகிராம் உயர்தர அம்புல் வாழைப்பழங்களை உள்ளூர் சந்தைக்கு வழங்குகின்றது. மேலும், இந்த வாழைப்பழங்கள் பல வெளி நாடுகளுக்கு வழங்கப்படுகின்றன மற்றும் ஒரு மெட்ரிக் தொன் வாழைப்பழம் 600-700 அமெரிக்க டொலர்கள் விலையில் விற்பனைச் செய்யப்படுகிறது.

ராஜங்கனையில் அம்புல் வாழைக் கன்றுகளை பயிரிட்ட விவசாயிகள் இவ்வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் அம்புல் வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்து நாட்டிற்கு 28000 அமெரிக்க டொலர்களை ஈட்ட முடிந்துள்ளதாக திட்டப்பணிப்பாளர் ரொஹான் விஜயக்கோன் குறிப்பிட்டார்.

விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட உள்ளூர் விவசாயிகளின் பொருளாதாரத்தை வலுப் படுத்தும் வேலைத்திட்டம் தற்போது பல மாவட்டங்களில் பல்வேறு திட்டங்களை நடைமுறைப் படுத்துகிறது என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். (அ)

# இரு வாரங்களுக்கு ஒரு முறை இறக்குமதி தடை திருத்தப்படும்

*கொழும்பு, செப். 14*

அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக சில இறக்குமதிகளுக்கு விதிக்கப்பட்ட தடை இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை திருத்தப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பின்போது, அமைச்சர் ரமேஷ் பத்திரன இதனை தெரிவித்தார்.

தற்காலிக நடவடிக்கையாக சில பொருட்களின் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் ரமேஷ் பத்திரன மேலும் கூறினார்.

அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக இறக்குமதி கட்டுப்பாடு அமுலில் உள்ளதாகவும், அது தீர்க்கப்பட்டதும் அனைத்து கட்டுப்பாடுகளும் நீக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இறக்குமதித் தடை காரணமாக சில துறைகளில் தடை ஏற்படுத்திய தாக்கத்தை கருத்தில் கொண்டு, அரசாங்கம் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை திருத்தும் மேற்கொள்ளும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# 417 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு!

*கொழும்பு, செப். 14*

கைதிகள் தினத்தை முன்னிட்டு 417 கைதிகள் விசேட பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளர்.

நேற்று முன் தினம் கைதிகள் தினத்தை முன்னிட்டு, அரசியலமைப்பின் 34 ஆவது சரத்தின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய இந்த பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அபராதம் செலுத்த முடியாத மற்றும் சிறிய குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர்.

இதேவேளை, சிறைச்சாலைகளில் கூட்ட நெரிசலைக் குறைக்க புதிய வழிமுறைகளை அறிமுகப்படுத்தவேண்டும் என தமது கடமை பொறுப்பேற்கும் நிகழ்வில் நீதி மற்றும் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்தார். (அ)

# அரச வைத்தியசாலைகளில் மீண்டும் மருந்து தட்டுப்பாடு

## வைத்திய அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 14

நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு மீண்டும் மோசமான நிலையை எட்டியுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் புற்றுநோய் வைத்தியசாலை உள்ளிட்ட அனைத்து வைத்தியசாலைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர், வைத்தியர சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

அனைத்து வகையான மருந்துகளுக்கும் தட்டுப்பாடு நிலவுவதன் காரணமாக, வைத்தியசாலைகளின் அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த விடம் வினவியபோது,

குறிப்பிட்ட சில மருந்துகளுக்கு மட்டுமே தட்டுப்பாடு நிலவுகின்ற போதிலும், வைத்தியசாலை செயற்பாடுகளில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என தெரிவித்தார்.

தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள மருந்துகளை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

இதனிடையே, மகரகம அபேக்ஷா வைத்தியசாலையில் புற்றுநோயாளிகளுக்கு வழங்கப்படும் 15 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக வைத்தியசாலையின் பணிப்பாளர், வைத்தியர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான மருந்துகள் நன்கொடையாளர்களிடமிருந்து கிடைக்கப் பெறுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஏனைய மருந்துகள் உள்ளூர் விநியோகத்தர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படுவதாக வைத்தியசாலை பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (அ)



# யாழில் ஹெரோயினுடன் இளைஞர் ஒருவர் கைது!

## ரூ.20 லட்சம் பெறுமதியான தங்க நகைகளும் மீட்பு

யாழ்ப்பாணம், செப். 14

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு அருகில் பெண்கள் பாவிக்கும் கைப் பையுடன் நடமாடியவரிடம் இருந்து சுமார் 20 இலட்ச ரூபா பெறுமதியான நகைகளும், ஹெரோயின் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளன.

மாவட்ட செயலகத்திற்கு அருகாமையில் திங்கட்கிழமை மாலை பெண்கள் பாவிக்கும் கைப்பையுடன் சந்தேகத்திற்கு இடமான முறையில் இளைஞன் ஒருவன் நடமாடியுள்ளான்.

அது தொடர்பில் தகவல் அறிந்த யாழ்ப்பாண பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் சம்பவ இடத்துக்குச் சென்று, சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய இளைஞனிடம் விசாரணைகளை முன்னெடுத்து, அவரது உடைமைகளை சோதனையிட்டனர்.

குறித்த இளைஞன் குருநகர் பகுதியை சேர்ந்தவர் என்றும், இளைஞன் வைத்திருந்த பெண்களின் கைப்பையினுள் சுமார் 08 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் சுமார் 20 இலட்ச ரூபாய் பெறுமதியான தங்க நகை என்பன காணப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர்.

இளைஞனை யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# தியாகி திலீபனின் நினைவு தினத்தை முன்னிட்டு ஊர்திப் பவனிக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப். 14

1987ஆம் ஆண்டு இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கெதிராக ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த தியாகி திலீபன் 35ஆவது வருட நினைவு தினத்தை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞரணியின் ஏற்பாட்டில் ஊர்திப் பவனியொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

01. தமிழ்த் தேசம் இறைமை சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி.
02. இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி
03. வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான சர்வதேச நீதி.
04. அரசியல்கைதிகளின் விடுதலை
05. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கு
06. பௌத்தசிங்கள மயமாக்கலை நிறுத்து

என்ற தமிழர்களின் அபிலாஷைகளை முன்வைத்து ஊர்திப்பவனி இடம்பெறவுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞரணி தெரிவித்துள்ளது.

இந்த ஊர்திப்பவனி ஆரம்பிக்கும் திகதி, மற்றும் இடம் என்பன குறித்த விவரங்கள் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மருந்து கொள்வனவுக்கு மேலும் 100 மில்லியன் டொலர் ஒதுக்கீடு!

கொழும்பு, செப். 14

மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக சுகாதார அமைச்சுக்கு 100 மில்லியன் டொலர்களை மேலதிகமாக ஒதுக்கீடு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அமைச்சரவைப் பேச்சாளர் இதனை தெரிவித்தார்.

அத்தியாவசிய மருந்துகள் மற்றும் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக குறித்த நிதி மேலதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் ரமேஷ் பத்திரன கூறினார். (அ)

# முட்டை இடும் கோழிகளின் இறக்குமதி அளவு குறைந்தது

கொழும்பு, செப். 14

கடந்த வருடத்திற்கு இணையாக இந்த வருடமும் முட்டை இடும் கோழிகள் இறக்குமதி செய்யும் அளவு குறைவடைந்துள்ளதன் காரணமாக முட்டை மற்றும் கோழி இறைச்சிக்கான தட்டுப்பாடு ஏற்படக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர, ராஜாங்க அமைச்சர் வி.பி. ஹேரத் ஆகியோருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

விலங்கு உணவு தட்டுப்பாடு, அவற்றின் விலை உயர்வு, தீவனம் மற்றும் விற்றமின்களின் சடுதியான விலை அதிகரிப்பு என்பனவற்றிற்கு மத்தியில் முட்டை மற்றும் கோழி இறைச்சி தொழில்துறை பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளதாக அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த வருடத்தின் ஜூலை மாதத்தில் நாட்டின் முட்டை உற்பத்தி 164 மில்லியன்களாகவும், கோழி இறைச்சி உற்பத்தி 18 மெற்றிக் தொன்னாகவும் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

2021 பெரும் போகத்தின்போது, இரசாயனப் பசளை தடை காரணமாக நாட்டின் சோள உற்பத்தி 90 ஆயிரம் மெற்றிக் தொன்னாக வீழ்ச்சியடைந்தமையே முட்டை மற்றும் கோழி இறைச்சி உற்பத்தி குறைந்தமைக்கான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக விலங்கு உணவு தயாரிப்பிற்காக பயன்படுத்தப்படும் சோளத்திற்கு மாற்றாக இறக்குமதி செய்துள்ள அரிசி வகைகளில் ஒரு பகுதியை வழங்குமாறு விலங்கு உணவு உற்பத்தியாளர்கள் விவசாய அமைச்சரிடம் கோரியுள்ளனர். (அ)

# நாளொன்றுக்கு 25 வீடுடைப்பு சங்கிலி பறிப்புச் சம்பவங்கள்!

கொழும்பு, செப். 14

நாட்டின் பல்வேறு பகுதிகளில் நாளொன்றுக்கு 25 வீடுடைப்பு மற்றும் தங்கச் சங்கிலிகளை பறிக்கும் சம்பவங்கள் பதிவாகுவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களே இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக இலங்கைக்கு ஐஸ் போதைப்பொருள் கடத்தப்படுகின்றமை அதிகரித்துள்ளதாக அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார்.

இதனிடையே, அண்மைக்காலமாக தென் மாகாணத்தில் இடம்பெறும் கொலைச் சம்பவங்கள் தொடர்பில் விசேட பொலிஸ் குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக எஸ்.ஹெட்டியாராய்ச்சி குறிப்பிட்டார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு இடையிலான முரண்பாடுகளே இந்தக் கொலைச் சம்பவங்களுக்கான காரணமென அவர் மேலும் கூறினார். (அ)

# வவுனியா தண்டவாளத்தில் கால்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் சடலம்!

வவுனியா, செப். 14

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் உள்ள ரயில் தண்டவாளத்திற்கு அருகில் இரு கால்களும் துண்டிக்கப்பட்ட நிலையில் சடலம் ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை காலை கண்டு பிடிக்கப்பட்டது.

தாண்டிக்குளம் பகுதியில் தண்டவாளத்தில் நேற்றுக் காலை சடலம் ஒன்று காணப்படுவதை அவதானித்த பிரதேச வாசிகள் இது தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

விசாரணைகளின் படி இறந்தவர் 45 வயது மதிக்கத்தக்க ஆண் என்று தெரிய வருகிறது.

இவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு வேளையில் ரயிலில் மோதுண்டு இரு கால்களும் துண்டிக்கப்பட்டதால் கடும் இரத்தப்போக்கு காரணமாக மரணித்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இதேவேளை அவருக்கு அருகில் ஒரு மோட்டார் சைக்கிள் ஒன்றும் நிறுத்தப்பட்டுள்ளது.

எனினும் உயிரிழந்தவர் யார் என்பது குறித்து இதுவரை அடையாளம் காணப்படவில்லை. (அ)

# தேசிய, சர்வதேசிய கண்டனத்துக்குள்ளாகும் அரசாங்கத்தின் அடக்குமுறை



கலாநிதி ஜெகான் பெரேரா



கடந்த ஜூலையில் உச்சக்கட்டத்தை அடைந்த மக்கள் போராட்ட இயக்கத்துக்கு எந்த அளவிலாவது தலைமைத்துவத்தை வழங்கியவர்களை வேட்டையாடும் நடவடிக்கைகள் நிலையாக தொடருகின்றன. மிகவும் இறுதியாக கைதானவர் விருது பெற்ற ஒரு நடிகை. ஜனாதிபதி மாளிகை போராட்டக்காரர்களின் ஆக்கிரமிப்பில் இருந்தபோது அவர் அதற்குள் பிரவேசித்திருத்தார். ஜனாதிபதி செயலகத்துக்கு வெளியே நடைபெற்ற மக்கள் போராட்டத்தில் அவர் ஒரு துடிப்பான பேச்சாளராகவும் இருந்தார். போராட்டங்களில் ஈடுபட்டவர்களை வேட்டையாடுவது தற்போதைய அரசாங்கத்தின் அருவருக்கத்தக்க ஒரு நடவடிக்கையாகும். அது தேசியரீதியிலும் சர்வதேச ரீதியிலும் கடுமையான கண்டனத்துக்குள்ளாகியிருக்கிறது.

ஆனால், அடக்குமுறை தொடருகிறது. அதிகாரத்தில் உள்ளவர்கள் விவேகமற்றவர்கள் என்பதனால் அல்ல, தங்களது நலன்களைக் பாதுகாப்பதில் அவர்கள் விவேகமானவர்கள் என்பதனாலேயே அவ்வாறு நடைபெறுகிறது. அவர்கள் நீண்டகாலம் பதவியில் இருக்க வேண்டும் என்பதற்காக எதிர்காலத்தில் மக்கள் போராட்டங்கள் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்யக்கூடிய முன்கூட்டிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள் வேண்டியது அவசியம் என்று அவர்கள் உணர்ந்து செயற்படுகிறார்கள். பழைய மாதிரியான ஆட்சிமுறைக்கு சாத்தியமானளவு விரைவாக திரும்புவதற்கும் அவர்கள் விரும்புகிறார்கள்.

ஏற்கெனவே பதவிகளை வகிக்கும் 21 அமைச்சர்களுக்கு மேலதிகமாக 38 இராஜாங்க அமைச்சர்கள் ஜனாதிபதியினால் கடந்தவாரம் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் பலர் ஊழல் நடவடிக்கைகளிலும் அதிகார துஷ்பிரயோகத்திலும் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களைப் பொறுத்தவரை இது ஒரு குறிப்பிடத்தக்க மீள்வருகை. மூன்று மாதங்களுக்கு முன்னர் மக்கள் போராட்டம் உச்சக்கட்டத்தில் இருந்தபோது அவர்கள் பதவிகளில் இருந்து விரட்டப்பட்டார்கள்.

அடுத்த தேர்தல்கள் வரை ஒரு இடைக்காலத்துக்கு 15 க்கும் மேற்படாத அமைச்சர்களுடன் கூடிய சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு முனானாள் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார். புதிய அரசாங்கத்தின் கீழ் அமைச்சர்களின் தொகை 60 க்கும் அதிகமாகக் கூடிய சாத்தியம் இருக்கிறது. அவர்களில் அதிகப் பெரும்பாலானவர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாகவும் எஞ்சியவர்கள் வேறு கட்சிகளில் இருந்து வெளியேறியவர்களாகவும் இருப்பர். இது "சர்வகட்சி அரசாங்கம்" என்பதை கேலிக்கூத்தாக்குகிறது.

உண்மையில், போராட்ட இயக்கத்தை சேர்ந்தவர்களைத் தவிர முக்கியமான சகல கட்சிகளும் அவற்றின் சுய நலன்களுக்காகவே செயற்படுகின்றன என்றுதான் கூறவேண்டும். பொருளாதார இடர்பாடுகளினாலும் விரைவான மாற்றத்துக்கான இலட்சியத்தாலும் தூண்டப்பட்ட உணர்வுகளினால் போராட்டக்காரர்கள் கட்டுண்டார்கள். தேசிய நலனுக்காக சிந்தித்ததற்காகவும் ஊழல் தனமான அரசியல் தலைவர்களை பதவிகளில் இருந்து விரட்டிவிட்டு முறைமை மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும் என்று கோரியதற்காகவும் அவர்கள் இப்போது ஒவ்வொருவராக "விலையை" செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தின் கைகளில் சட்ட அதிகாரமும் இராணுவ பலமும் இருக்கிறது என்பதை தெரிந்துகொண்டிருந்த போதிலும் கூட இந்த கோரிக்கைகளை முன்வைக்க போராட்ட இயக்கத்தவர்கள் பயப்படவில்லை.

மறுபுறத்தில் அரசாங்கம் அதன் சொந்த நலனைப் பற்றி சிந்தித்துக் கொண்டு சலுகை அரசியலின் மூலமாக அதன் பாராளுமன்ற பெரும்பான்மையை பேணுவதில் அக்கறையுடன் செயற்படுகிறது. ஆளும் கட்சி அதன் தன்னலத்துக்காக ஜனாதிபதி மீது பிரயோகித்த நெருக்குதல் காரணமாகவே அவர் பெரும் எண்ணிக்கையில் அமைச்சர்களை நியமித்தார். அந்த அமைச்சர்களில் அறகலய உச்சக்கட்டத்தில் இருந்தபோது அரசாங்கத்தில் இருந்து பதவி விலகியவர்களும் சொந்த கட்சிகளின் ஒழுங்கு கட்டுப்பாட்டை மீறி வெளியே வந்தவர்களும் அடங்குகிறார்கள். அவர்கள் அமைச்சர் பதவிகளை ஏற்றுக்கொள்வதற்கு எந்த விதமான தார்மீக உரிமையும் இல்லாதவர்கள்.

**ஆர்ப்பாட்டத்தை குற்றமாக்குதல்**

பாராளுமன்றத்தில் தொடர்ந்தும் பெரும்பான்மைப் பலத்தை தக்கவைத்துக் கொண்டிருக்கும் ஆளும் கட்சியே உண்மையில் அதிகாரத்தை கையில் வைத்திருக்கிறது. ஆளும் கட்சிக்கு ஆரம்பத்தில் இருந்த 2ல் 3 பெரும்பான்மையில் பிளவு ஏற்பட்டிருக்கிறது. ஆனால், ஆனால் பிரிந்து சென்றிருக்கும் குழுக்கள் தங்களை பெரும்பான்மையினராக அணிதிரட்டி அரசாங்கத்தை தோற்கடிக்கக்கூடியவர்களாக இல்லை.

அமைச்சர் பதவியை இன்னமும் பெறாமல் இருக்கும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்தியடைந்திருப்பதால் அண்மைய எதிர்காலத்தில் மேலும் அமைச் சர்கள் நியமிக்கப்பக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வாகனங்கள், வீடுகள் மற்றும் தனிப்பட்ட உதவியாளர்கள் நியமனம் என்று இந்த அமைச்சர்களுக்கான வசதிகளுக்காக பெருமளவு பணம் செலவாகிறது. தேசிய வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக பட்ஜெட் பற்றாக் குறையை குறைப்பதற்கு அரசாங்கம் கடுமையாக கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கும் ஒரு நேரத்தில் அமைச்சர்களுக்கான இந்த செலவுகள் பெரும் வீண்விரயமாகும்.

போராட்ட இயக்கத்தில் பங்கேற்றவர்களுக்கு எதிராக தொடரும் அடக்குமுறையின் பின்புலத்தில் நோக்கும்போது அரசாங்கம் மீது மக்கள் எதிர்ப்பு கிளம்புவதற்கு இப்போதைக்கு சாத்தியமில்லை. இது அரசியல் உறுதிப்பாடு ஏற்படுகிறது என்ற எண்ணத்தை உருவாக்கியிருக்கிறது. அரசாங்கம் மக்கள் போராட்டங்களை ஒடுக்கும் அதன் முயற்சிகளில் பயனைக் கண்டிருக்கிறது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்டத்தை முழுப்பலத்துடன் பயன்படுத்துவதன் மூலம் இதை அரசாங்கம் சாதித்திருக்கிறது.

அரசாங்கத்திடம் இருக்கும் "ஆயுதங்களில்" பிரதானமான சட்ட ஆயுதம் பயங்கரவாத தடைச்சட்டமாகும். வடபகுதியில் வளர்ந்துகொண்டிருந்த தமிழ் தீவிரவாதத்துக்கு எதிராக பயன்படுத்துவதற்கு தற்காலிகமான ஒரு ஏற்பாடாகவே இந்த சட்டம் 1979 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. போராட்ட இயக்க தலைவர்கள் சிலருக்கு எதிராக இந்த சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்தியிருக்கிறது. தேசிய மற்றும் சர்வதேச மனித உரிமைகள் குழுக்களிடம் இருந்தோ அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகளிடம் இருந்தோ வந்திருக்கக்கூடிய ஆட்சேபனைகளை அரசாங்கம் அலட்சியம் செய்திருக்கிறது. பயங்கரவாத தடைச்சட்டம் பயங்கரவாதத்தின் அர்த்தத்தை வரைவிலக்கணம் செய்யவில்லை. ஆனால் அரசாங்கம் பயங்கரவாதத்தை வரைவிலக்கணம் செய்வதில் நிராயுத பாணிகளினால் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டத்தையும் சேர்த்திருக்கிறது.

மக்கள் ஆர்ப்பாட்டத்தை அரசாங்கம் குற்றச்செயலாக கருதி அடக்குமுறையை மேற்கொள்கிறது. அதன் காரணத்தினால்தான் மக்களின் பொருளாதார நிலைமை தொடர்ந்தும் மோசமாகிக்கொண்டு போகின்றபோதிலும் கூட இப்போது போராட்ட இயக்கம் மீண்டும் முன்னெடுக்கப்படுவதற்கான அறிகுறியைக் காணவில்லை. போராட்ட இயக்க தலைவர்களை அரசாங்கம் இலக்கு வைப்பதனால் (6 மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்றதைப் போன்று ) திட்டமிடப்படாத முறையிலும் தன்னெழுச்சியாகவும் பொதுமக்கள் குழுக்கள் எதிர்காலத்தில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதை தடுக்ககூடியதாக இருக்கும்.

போராட்ட இயக்கத்துடன் தொடர்புபட்டிருந்தவர்களும் போராட்டங்களின்போது வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுமாக 4000 க்கும் அதிகமானவர்கள் அரசாங்கத்தின் தடுப்புக்காவலில் இருக்கிறார்கள். இவர்களில் எந்தவிதமான வன்முறையிலும் இறங்காமல் அமைதியாக ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றவர்கள் கணிசமான எண்ணிக்கையில் இருக்கிறார்கள்.

போராட்ட இயக்கத்துக்கு தலைமைத்துவத்தை வழங்கியவர்கள் சிறைக் கம்பிகளுக்கு பின்னால் இருக்கும் நிலையில் அல்லது நீதிமன்றங்களில் குற்றஞ்சாட்டப்பட்டு பிணையில் விடப்பட்டிருக்கும் நிலையில், முன்னைய ஜனாதிபதியை பதவி துறக்கவைத்ததுடன் முன்னைய அரசாங்கத்தையும் பதவியில் இருந்து இறங்கச் செய்ததைப் போன்ற மக்கள் கிளர்ச்சியொன்று எதிர்காலத்தில் இடம்பெறுவதற்காக சாத்தியப்பாடுகள் குறைவு.

தற்போது அரசாங்கத்துக்கு ஒரு தடுப்பை போடக்கூடியதென்றால் அது சர்வதேச நெருக்குதல் மாத்திரமே. சட்ட மற்றும் பொருளாதார ரீதியான தடைகள் விதிக்கப்படக்கூடிய சாத்தியப்பாட்டுக்கான ஒரு அறிகுறியாக ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரினால் வெளியிடப்பட்ட பூர்வாங்க அறிக்கையை கருதலாம். அரசியலமைப்பு ரீதியான கட்டுப்பாடுகளை அல்லது பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டிய தேவையை காரணம் காட்டி சர்வதேச நெருக்குதலின் கவனத்தை திருப்புவதென்பது அரசாங்கத்துக்கு கஷ்டமானதாகவே இருக்கும்.

இலங்கையில் சகல தரப்பினராலும் இழைக்கப்பட்டிருக்கக்கூடிய சர்வதேச குற்றங்களைச் செய்தவர்களை பொருத்தமான சர்வதேச வலையமைப்பு ஊடாகவும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளின் ஒத்துழைப்புடனும் (ஏற்றுக்கொள்ளப்பட்ட புலம் கடந்த அல்லது சர்வதேச நியாயாதிக்க கோட்பாடுகளின் கீழ் உட்பட) தேசிய நியாயாதிக்கத்தில் உள்ள நீதிச் செயன்முறைகள் ஊடாக விசாரித்து வழக்கு தொடருவதற்கும் மோசமான சர்வதேச மனித உரிமை மீறல்கள் அல்லது கடுமையான மனிதாபிமானச் சட்ட மீறல்களில் ஈடுபட்டதாக நம்பகமாக குற்றஞ்சாட்டப்படுபவர்களுக்கு எதிராக சொத்து முடக்கம் மற்றும் பயணத் தடைகள் போன்ற தடைவிதிப்புக்களை செய்வதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கும் இலங்கையில் மனித உரிமைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்திய பொருளாதாரக் குற்றங்களை விசாரித்து களவாடப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கும் சர்வதேச சமூகம் ஒத்துழைக்க வேண்டும் என்று உயர்ஸ்தானிகரின் அறிக்கை விதப்புரை செய்கிறது.

இவ்வாரம் ஆரம்பமாகியிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 51 வது கூட்டத்தொடரில் இம்மாத பிற்பகுதியில் இலங்கைக்கு எதிராக புதிய தீர்மானம் ஒன்று நிறைவேற்றப் படக்கூடிய சாத்தியம் இருக்கிறது. இது முன்னர் எதிர்பார்க்கப்படாததாகும்.

**(09 ஆம் பக்கம் பார்க்க...)**

# இலங்கை தமிழ் அரசியல் கைதிகளை
## 4 ஆண்டுகளுக்கு பின் சந்தித்த உறவினர்கள்

**ரஞ்சன் அருண் பிரசாத்**



இலங்கையில் நடந்த 30 வருட உள்நாட்டு யுத்த காலப் பகுதி மற்றும் அதனை அண்மித்த காலப் பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை சந்திக்க 4 வருடங்களின் பின்னர் அவர்களின் உறவினர்களுக்கு திங்களன்று (செப்டெம்பர் - 11) வாய்ப்பு வழங்கப்பட்டது.

கொழும்பு - மெகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளில் 29 கைதிகளை சந்திப்பதற்கு இவ்வாறு வாய்ப்பு வழங்கப்பட்டதாக ‘குரலற்றவர்களின் குரல்’ அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவிக்கின்றார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் கொழும்பிற்கு வருகை தந்து, சிறைச்சாலையிலுள்ள தங்கள் உறவினர்களை சந்தித்து கலந்துரையாடினர்.

சுமார் 10 முதல் 27 வருடங்கள் வரையான காலம் சிறைச்சாலைகளில் 46 தமிழ் அரசியல் கைதிகளாக வாழ்ந்து வருவதாகவும் அவர் கூறுகின்றார்.

தமது பேரப் பிள்ளைகளை இதுவரை கண்டிராத, தமது மருமகள்களை இதுவரை கண்டிராதவர்களும் சிறைச்சாலைகளில் உள்ளதாக முருகையா கோமகன் தெரிவிக்கின்றார்.

‘தமிழ் அரசியல் கைதியாக இருக்கின்ற ஒருவரின் தலையில் முடிகூட இல்லை. அவரது தலையில் அவரது பேரப்பிள்ளை பொம்மை காரை உருட்டி விளையாடியது. உண்மையில் மனதுக்கு மிகவும் வேதனையாக இருந்தது. அந்த பிள்ளைகளின் பாசம், ஏக்கங்கள், இந்த தவிர்ப்புகளோடு வெளியில் இருக்கின்ற உறவுகள் இருக்கின்றார்கள். அதே போன்று உள்ளே இருக்கின்றவர்களும் அதே பாசத்திற்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அந்த வலிகளை எப்படி சொல்வது என்று எனக்கு தெரியவில்லை”, என முருகையா கோமகன் கூறுகின்றார்.

அரசியல் கைதிகள் மற்றும் உறவினர்கள் அவரவர் மடிகளில் இன்று உறங்கிய சம்பவம் குறுகிய நேர திரைப்படமாக நிறைவடைந்துள்ளதாகவும் முருகையா கோமகன் குறிப்பிடுகின்றார்.

‘கிட்டத்தட்ட 67 வயது அம்மா, தமிழ் அரசியல் கைதியாக உள்ளே இருக்கின்றார். அவள் தன்னுடைய மடியில் தன்னுடைய பிள்ளையை வைத்திருந்தாள். அந்த மடியிலேயே அவள் நித்திரையாகிட்டாள். உள்ளே இருந்தவர்கள், தங்களுடைய உறவினர்களின் மடிகளில் படுத்து, உறங்கக் கூடிய அந்த சம்பவம், வலி நிறைந்த குறுகிய நேர திரைப்படமாக அது நிறைவடைந்து விட்டது” என கண்ணீருடன் முருகையா கோமகன் குறிப்பிட்டார்.

30 வருட யுத்த காலத்தில் சுமார் 27 வருடங்களாக சிறை வாழ்க்கை அனுபவித்து வரும் தமிழ் அரசியல் கைதியொருவரின் சகோதரியான வாகினி, கருத்து தெரிவித்தார்.

‘நீண்ட நாள் அரசியல் கைதிகள் என்ற வரிசையில் எனது அண்ணன், முதலிடத்தில் இருக்கின்றார். 4 வருடமாக அவரை பார்க்கவில்லை. எந்த விதமான தொடர்பும் இல்லை. கொரோனா பிரச்னை காரணமாக அவரை சந்திப்பதற்கு கிடைக்கவில்லை. 4 வருடத்திற்கு பிறகு இவரை நேரில் சந்தித்திருக்கிறோம். மூன்று தலைமுறையாக அவரை பார்வையிட வந்துகொண்டிருக்கின்றோம். நான் வந்திருக்கிறேன். எனது மகள், பிள்ளைகளை கூட்டிட்டு வந்திருக்கின்றேன். பேரப் பிள்ளைகளையும் கூட்டி வந்து காட்டும் சூழலில் நாங்கள் இருக்கிறோம்.

ஆனால் எங்கள் அண்ணனுக்கு விடுதலை இன்னும் கிட்டவில்லை. 27 வருடமாகின்றது. மூன்று மாதத்திற்கு முன்புதான் எங்கள் அம்மா இறந்தார். அதற்கு கூட்டி வந்தார்கள். இப்படி ஒவ்வொருவருடைய இறப்பிற்கு மாத்திரம்தான் எங்களுடைய வீடுகளுக்கு வந்து போகும் சூழல் இருக்கின்றது. நாளைக்கு நாங்களும் இறந்தால்தான் அவர் வீட்டுக்கு வரக்கூடிய சூழல் இருக்கும்” என கண்ணீருடன் வாகினி தெரிவித்தார்.

17 வருடங்களாக அரசியல் கைதியாக சிறைவாசம் அனுபவித்து வரும் தனது தந்தையின் விடுதலை வரை, தனது திருமணத்தை ஒத்தி வைத்து வருவதாக அரசியல் கைதி ஒருவரின் மகன் பிரின்ஸ் குறிப்பிடுகின்றார்.

‘கிட்டத்தட்ட 9, 10 வயதாக இருக்கும் போது, எனது அப்பா பிடிப்பட்டார். இப்போது எனக்கு 27 வயதாகின்றது. இதுவரை சரியான முடிவில்லை. நாங்கள் அவருடைய விடுதலையை காத்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். எனது திருமணம் நடைபெற இருக்கின்றது. அதற்கும் அவருடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். இந்த வருடம் அவர் வர போகின்றார் என சொல்லி 2, 3 திகதி பார்த்து வைத்தோம். ஆனால் அந்த தேதிகளில் அவர் வரவில்லை. அவர் வர வேண்டும் என்பதுதான் எங்களின் முதல் நோக்கம்” என அவர் கூறுகின்றார்.



பல தசாப்தங்களாக அரசியல் கைதிகள் என்ற அடிப்படையில் தொடர்ந்து சிறைச்சாலைகளில் சிறைவாசம் அனுபவித்து வரும் தமிழ் அரசியல் கைதிகளை, பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசியல் கைதிகளின் உறவி னர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான பேச்சுவார்த்தைகளை ஜனாதிபதியுடன் நடத்துவதற்கான சந்தர்ப்பத்தை தாம் எதிர்பார்த்துள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர். **(பிபிசி)**

# தேசிய, சர்வதேசிய கண்டனத்துக்குள்ளாகும்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த தீர்மானம் நிறைவேற்றப்படுவதை தடுப்பதற்கு ஜெனீவாவில் உள்ள இலங்கை அரசாங்க தூதுக்குழு ஆபிரிக்க மற்றும் ஆசிய நாடுகள் மத்தியில் ஆதரவை திரட்டும் முயற்சிகளில் ஈடுபடுகின்றது. பெரும்பான்மையான மக்களை வறுமையின் எல்லைக்கோட்டுக்கு அல்லது மெய்யான வறுமைக்கு தள்ளிவிட்டிருக்கும் பொருளாதார சவால்களை சமாளிப்பதாக இருந்தால் சர்வதேசத்தின் தடைகள் அல்ல அதன் புரிந்துணர்வும் ஆதரவுமே இலங்கைக்கு தேவை என்பதே தூதுக்குழுவின் வேண்டுகோளாகும்.

ஆனால், ஐக்கிய இராச்சியமும் அமெரிக்காவும் ஜேர்மனி மற்றும் கனடாவுடன் சேர்ந்து (அவையே தீர்மானத்துக்கு அனுசரணை வழங்கும் முக்கிய நாடுகள்) இந்த தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு பெரும்பான்மையான நாடுகளின் ஆதரவைக் கொண்டுள்ளன என்று கூறப்படுகிறது.

நம்பகமான சான்றுகள் உள்ளவர்களுக்கு எதிராக விசாரணைகளை நடத்துவதற்கு தங்களது சட்டங்களின் கீழ் அனுமதிக்கப்படக்கூடிய சர்வதேச நியாயாதிக்கத்தை செயற்படுத்துவதற்கு விரும்புகின்ற நாடுகளுக்கு சட்ட மற்றும் ஏனைய வழிகாட்டல்களை வழங்கி உதவுவதே தீர்மானத்தின் நோக்கமாகும். இலங்கையில் மனித உரிமைகள் மீது கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும் பொருளாதாரக் குற்றங்களுக்கு பொறுப்பான அரசியல் தலைவர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மான வரைவு விதப்புரை செய்கிறது.

இலங்கையை முழுமையாக எதிர்மறையான முறையில் பாதிக்கக்கூடிய தடைகளை விதிப்பதை விடுத்து உரிமைமீறல்களைச் செய்த முக்கிய குற்றவாளிகளை இலக்குவைப்பதே சர்வதேச சமூக தந்திரோபாயமாக இருப்பதாக தோன்றுகிறது.

ஜெனீவாவில் இலங்கை மீதான தீர்மானத்துக்கு அனுசரணையாக செயற்படும் அமெரிக்கா சர்வதேச நாணய நிதியத்துடனான அரசாங்கத்தின் பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவு வழங்கவும் விவசாயிகளுக்கு ஆதரவாகவும் ஏனைய நலன்புரி நோக்கங்களுக்காகவும் 6 கோடி டொலர்களை ஒதுக்கீடு செய்யவும் உறுதியளித்ததில் இருந்து இதை புரிந்துகொள்ளமுடியும்.


சர்வதேச உதவி நாட்டுக்கு அவசியமாக தேவைப்படுகின்ற இத்தகைய பின்புலத்தில், கடந்த காலத்தில் தேர்தல்களில் வெற்றிபெறுவதற்காக ஐ.நா. தீர்மானங்களுக்கு எதிராக தேசியவாத எதிர்ப்பை தூண்டி விட்டதைப் போன்று இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தினால் செய்யக்கூடியது சாத்தியமில்லை. பொருளாதார வீழ்ச்சிக்கு பொறுப்பானவர்களையும் எதிர்ப்பியக்கங்களை நசுக்குவதில் நாட்டம் கொண்டிருப்பவர்களையும் பொறுப்புக்கூற வைக்கக்கூடிய நடவடிக்கைகளை பலர் ஏற்றுக்கொள்வார்கள்.

அபிவிருத்தியை தாமதிக்கின்றதும் மக்களின் அவலங்களை நீடிக்கின்றதுமான அடக்குமுறை பெரும்பாலும் சகலருக்குமே பாதிப்பாக அமையக்கூடிய கொந்தளிப்புகளையே கொண்டுவரும். இதை நன்றாக தெரிந்து கொண்டாலும், அரசியல் தலைவர்கள் தங்களது ஆட்டத்தை தொடர்ந்தால் தேசிய அனர்த்தத்துக்கே அது வழிவகுக்கும்.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**18)** 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? .................................

**19)**  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

............................................

**20)** தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........

ii) 18 , 15 , 12 , ............. , ...........

**21)** 3, 9, 14, 6, 10, 12,

பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

.............................................................

**22)** ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

...........................................................................................

**23)** ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..................................................................

**24)** பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..................................................................

**25)** 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ....................................................

**26)** **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

**27)** கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

......................................................

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?


......................................................

**29)** ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

...................................................... (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30)** சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)  2)  3) 

**31)** வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்

1) அபயவாவி 2) இரணைமடுக்குளம் 3) பராக்கிரமபாகு சமுத்திரம்

**32)** உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டி எந்த படிமுறை ஆகும்?

1) திடசித்தம் 2) உதிப்பு 3) உடலைத் தளர்த்தல்

**33)** தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?

1) சூரியன் 2) வாளேந்திய சிங்கம் 3) நெற்கதிர்

**34)** பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?

1) 1976 2) 1851 3) 1815

**35)** வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?

1) இறப்பர், வேம்பு 2) இறப்பர், தாழம்பூ 3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6 2) 8
**19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130 2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745
**23.** 455
**24.** 1l 100ml / 1100ml
**25.** ரூபாய் 144.00
**26.** 1) 190 2) 100 3) 290
**27.** 15 : 30
**28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1
**31.** 2
**32.** 3
**33.** 2
**34.** 3
**35.** 2

### கல்வி tv CHANNEL-1

**14.09.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் மறு ஒளிபரப்பு | மாதிரி வினாத்தாள் மறுஒளிபரப்பு-LIVE கணிதம் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2

**14.09.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் அமைக்க முயற்சி!

## உரிய ஏற்பாடுகள் குறித்து ஆராய்வு

அம்பாறை, செப். 14

**தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.**

மருத்துவ பீடத்துடன் இணைந்ததாக மருத்துவ கற்கைநெறிகளை பயில்வதற்கு அம்பாறை பொது வைத்திய சாலை தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில், பல்கலைக்கழகத்தின் உறுப்பினர்கள், சுகாதார உயர் மட்ட அதிகாரிகள் உள்ளிட்ட உயர்மட்ட குழுவினர், அம்பாறை பொது வைத்தியசாலைக்கு சென்று, மருத்துவ அபிவிருத்தி பீடத்தின் அபிவிருத்தி தொடர்பாக மீளாய்வு செய்தனர்.

குறித்த குழுவினர், தமது மீளாய்வு அறிக்கை தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அம்பாறை மாவட்ட செயலாளர் ஜே.எம்.ஏ. டக்ளஸுடன் கலந்துரையாடியுள்ளனர்.

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பாக முன்மொழிவதாகவும், ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார். (அ)



# பொருளாதார நெருக்கடியால் அவதியுறும் மக்களுக்கு கோழிக் குஞ்சுகள் விநியோகம்

அம்பாறை, செப். 14

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக, பல குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இறக்காமம் பிரதேச செயலக பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வருமானம் குறைந்த மக்களுக்காக அரிய இன கருங்கோழிக் குஞ்சுகள் இலவசமாக வழங்கும் நிகழ்வு இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். ரஷ்ஷான் (நளீமி) தலைமையில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

இக்கோழிக்குஞ்சுகள், வாழ்வாதாரம் இழந்த நலிவுற்ற மக்களை இனம்கண்டு அவர்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் அக்கரைப்பற்று தக்வா ஜும்மா பள்ளிவாசல் நிர்வாக சபையினரால் இலவசமாக வழங்கப்பட்டது.

அக்கரைப்பற்று தக்வா ஜும்மா பள்ளிவாசல் நிர்வாக சபையின் தலைவர் என்.ட. மன்சூர் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார். இந்நிகழ்வில், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.சி.எம். தஸ்லீம், முகாமையாளர் ட.கே.ரஹ்மதுல்லாஹ், சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் பிரியந்தி வேரகொட மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் தக்வா ஜும்மா பள்ளிவாசல் நிருவாக சபையினரும் பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தர்களும் மற்றும் பயனாளிகளும் கலந்துகொண்டனர். (அ)

# அரசியல் தீர்வை வலியுறுத்தி மல்லிகைத்தீவில் கவனயீர்ப்பு

திருமலை, செப். 14

வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கான கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வை பெற்றுத்தருமாறு வழியுறுத்தி, மூதூர் - மல்லிகைத்தீவு பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"100 நாள் செயல்முனைவு " எனும் திட்டத்தின்கீழ், ஓகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் 43ஆவது நாளாக மூதூர் - மல்லிகைத்தீவு பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.




வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு ஏற்பாடு செய்திருந்த இந்தப் போராட்டத்தில், பெண்கள் அமைப்பினர், பொதுமக்கள் மற்றும் சிவில் அமைப்பினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதில் கலந்துகொண்டவர்கள், "அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும்", "எங்கள் நிலம் எமக்கு வேண்டும்", "கருத்துச் சுதந்திரம் எங்கள் உரிமை", "ஒன்றுகூடுவது எங்கள் உரிமை" மற்றும் "அரசியல் உரிமை எமக்கு வேண்டும்" உள்ளிட்ட கோஷங்களை எழுப்பியதோடு, சுலோகங்களையும் ஏந்தியிருந்தனர்.

இதன்போது கருத்துரைத்த போராட்டக்காரர்கள், சிறுபான்மை மக்களுக்கான அரசியல் தீர்வு கிடைக்கவேண்டும் எனவும் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ள கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டுமெனவும் தெரிவித்தனர். (அ)



# ஓய்வுபெற்ற அதிபர் கௌரவிப்பு

மட்டக்களப்பு, செப். 14

வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்திலிருந்து ஓய்வு பெற்றுச் சென்ற அதிபர் எம்.ரீ.எம்.பரீட்டை கௌரவிக்கும் நிகழ்வு, நேற்று முன் தினம் நடைபெற்றது.

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கல்விக் கோட்ட அதிபர் சங்கத்தின் ஏற்பாட்டில், அதன் தலைவர் எம்.ஐ. செயினுலாப்தீன் தலைமையில், சந்தியாற்று வெளியில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில், அதிபர் பரீட் பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

முன்னதாக மரணமடைந்த அதிபர்களான என்.எம்.ஹஸ்ஸாலி மற்றும் யூ.எல்.எம். புஹாரி ஆகியோர்கள் இங்கு நினைவு கூரப்பட்டு, அவர்களுக்காக விசேட துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது.

அத்துடன், ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தால் வெளியிடப்பட்ட "எம்.ரீ.எம். பரீட் எனும் ஆளுமை" எனும் நூலும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், அதிதிகளாக கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.ரீ.அஜ்மீர், மட்டக்களப்பு மத்தி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.யூ.எம்.இஸ்மாயில் மற்றும் ஆசிரிய ஆலோசகர் எம்.பீ.எம்.நபீர் ஆகியோர்கள் கலந்துகொண்டனர். (அ)

# சம்பியனானது நிந்தவூர் ஹிக்மா

அம்பாறை, செப். 14

நிந்தவூர் ஹிக்மா விளையாட்டுக்க கழகம் கடந்த மூன்று வாரங்களாக நடாத்திய "ஹிக்மா வெற்றிக் கிண்ணம் - 2022" மென்பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடரின் இறுதி போட்டி நேற்றுமுன்தினம் நிந்தவூர் வெளவாளோடை கடற்கரை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டியில் நிந்தவூர் ஹிக்மா மற்றும் ஒலுவில் இலவன் ஸ்டார் ஆகிய அணிகள் போட்டியிட்டு நிந்தவூர் ஹிக்மா விளையாட்டுக் கழகம் சம்பியன் பட்டத்தை தனதாக்கியது.

ஹிக்மா விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஐ.எல்.எம். ஜாபிர் தலைமையில் இடம்பெற்ற இறுதி நாள் நிகழ்வுக்கு அகில இலங்கை



மக்கள் காங்கிரஸ் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளரும் நிந்தவூர் பிரதேச சபை தவிசாளருமான எம்.ஏ.எம். அஸ்ரப் தாஹிர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட கழகத்திற்கும் வீரர்களுக்கும் வெற்றிக் கிண்ணம் மற்றும் பரிசில்களையும் வழங்கினர்.

இந் நிகழ்வில் நிந்தவூர் பிரதேச சபை உறுப்பினர் சட்டத்தரணி ஏ.எல். றியாஸ் ஆதம், நிந்தவூர் அனைத்து விளையாட்டுக் கழக சம்மேளனத்தின் தலைவர் சட்டத்தரணி ஏ. நசீல், அம்பாறை மாவட்ட கபடி பயிற்றுவிப்பாளர் அனஸ் அஹமட், கிராம சேவை உத்தியோகத்தர் நளீம், ஆதம் அலி பௌன்டேஷன் நிறைவேற்று பனிப்பாளர் ஆதம் அலி ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)



# கனடா பிரதமரின் பொறுப்பற்ற பொருளாதாரக் கொள்கைகள்!

## கன்சர்வேடிவ் தலைவர் விசனம்

மொன்றியல், செப். 14

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் பொருளாதாரக் கொள்கைகள் பொறுப்பற்றவை என பிரதான எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் புதிய தலைவ ராக தேர்ந்தெடுக்கப்பட்ட பியர் பொய்லிவ்ரே விமர்சித்துள்ளார்.

ட்ரூடோவின் பொறுப்பற்ற பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக பணவீக்கம் மோச மாக அதிகரித்துள்ளது. மக்கள் வாங்கும் சக்தியை இழந்து வரு கின்றனர் என அவர் கூறினார்.

43 வயதான பியர் பொய் லிவ்ரே தனது கட்சியின் 68 வீத வாக்குகளைப் பெற்று கடந்த சனிக்கிழமை கன்சர் வேடிவ் கட்சியின் தலைவரா கத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2005 முதல் கன்சர்வேடிவ் கட்சியின் ஆறாவது தலைவ ராக இவர் தெரிவாகியுள்ளார். அதேவேளை, 2005 முதல் மூன்று தேர்தல்களில் ட்ரூடோ தலைமையிலான லிபரல் கட்சி யிடம் கன்சர்வேடிவ்கள் தோல்வியடைந்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த ஆண்டு நடந்த தேர்தலில் பொய்லிவ்ரோவுக்கு முன்ன தாக கன்சர்வேடிவ் கட்சியின் தலைவராக இருந்த ரின் ஓ டூல் ட்ரூடோவிடம் தோல்விய டைந்ததை அடுத்து கட்சித் தலைமைப் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டார். கன டாவில் 2025 வரை ஒரு புதிய தேசிய தேர்தல் எதிர்பார்க்கப் படாவிட்டாலும், கருத்துக் கணிப்பாளர்கள் பியர் பொய் லிவ்ரே தலைமையிலான கன்சர்வேடிவ்களை லிபரல் கட்சிக்கான ஒரு வலிமையான மாற்றாகக் கருதுகின்றனர்.

ஏழு ஆண்டுகள் பதவியில் இருக்கும் ட்ரூடோ நான்கா வது முறையாக போட்டியிட் டால் அவருக்கு கடும் போட்டி யாக பியர் பொய்லிவ்ரே இருப் பார் எனவும் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையிலேயே கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் பொருளாதாரக் கொள்கைகள் பொறுப்பற் றவை என பிரதான எதிர்க் கட்சியாக கன்சர்வேடிவ் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்ட பியர் பொய்லிவ்ரே விமர்சித்துள்ளார். பணவீக் கத்தை எதிர்த்துப் போராடுவ தற்கான வழியாக பிட்கொய்ன் உள்ளிட்ட கிரிப்டோகரன்சிக ளையும் அவர் ஊக்குவித்ததா கவும் பியர் பொய்லிவ்ரே குற் றஞ்சாட்டினார்.

இந்நிலையில் நேற்று முன் தினம் நியூ பிரன்சுவிக் சென் ஆண்ட்ரூஸில் இடம்பெற்ற லிபரல் கூட்டத்தில் பேசிய பிரதமர் ட்ரூடோ, க்ரிப்டோ கரன்ஸிகள் குறித்த பொய்லிவ் ரேவின் நிலைப்பாட்டை கேலி செய்தார்.

உலகளாகிய நெருக்கடி காரணமாக பெரும்பாலான நாடுகள் பொருளாதார நெருக் கடியைச் சந்தித்து வருவதாக வும் குறிப்பிட்ட ட்ரூடோ, ஏனைய நாடுகள் பலவற்றுடன் ஒப்பிடுகையில் கனடா பொரு ளாதாரம் மோசமடையவில்லை எனவும் கூறினார்.

(அ)

# உக்ரைன் வெற்றிகள் தொடர்வதற்கு மேற்கின் கூடுதல் ஆயுதங்கள் தேவை!

## உதவிகளை கோருகிறார் ஜெலென்ஸ்கி



கீவ், செப். 14

உக்ரைனில் ரஷ்யா ஆக்கிர மித்த பல நகரங்களை கைப் பற்றி உக்ரைன் படைகள் முன் னேறி வரும் நிலையில் இவ் வாறான வெற்றிகள் தொடர மேற்கு நாடுகள் கூடுதல் ஆயுத உதவிகளை வழங்க முன்வர வேண்டும் என உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி அழைப்பு விடுத்துள்ளார்.

வடகிழக்கு உக்ரைனில் உள்ள முக்கிய கோட்டையான இசியம் நகரை சனிக்கிழமை ரஷ்யா இழந்தமை அதன் மோசமான தோல்வியைக் குறிக்கிறது. ரஷ்யா கைப்பற் றிய நகரங்களை மீட்கும் போரில் உக்ரேனிய துருப்புக் கள் வேகமாக நகர்ந்து வரு கின்றன. இந்த மாத தொடக் கத்தில் இருந்து டசின் கணக் கான நகரங்களை உக்ரைன் படைகள் மீண்டும் கைப்பற்றி யுள்ளன.

வடகிழக்கில் கார்கிவ் அருகே உள்ள பெரும் பகுதி கள் மீண்டும் உக்ரைன் வசமா கியுள்ளன.

இந்நிலையில் அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகள் உக்ரைனுக்கு பில்லியன் டொலர் பெறுமதியான ஆயு தங்களாக வழங்கியுள்ளன. இது ரஷ்யப் படைகளை எதிர்த்து வெற்றி கொள்ள உதவியது என உக்ரைன் தெரி வித்துள்ளது. ரஷ்ய பயங்கர வாதத்தை தோற்கடிக்க மேற் குலக நாடுகள் தொடந்து ஒத் துழைப்பை வலுப்படுத்த வேண்டும் என ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி அழைப்பு விடுத்துள்ளார்.

இதேவேளை, மேற்கு நாடு களின் ஆதரவுடன் உக்ரேனி யப் படைகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள் ளதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அண்டனி பிளிங் கன் தெரிவித்தார்.

உக்ரைன் தன்னைப் பாது காத்துக்கொள்ள தேவையான எதிர் தாக்குதலைத் தொடர தேவையான ஆயுதங்களைக் கொண்டிருப்பதை மேற்கு நாடுகள் உறுதி செய்கின்றன என செய்தியாளர்களிடம் பேசிய அவர் தெரிவித்தார்.

வொஷிங்டன் கடந்த வாரம் உக்ரைனுக்கான தனது சமீபத்திய ஆயுத உதவித் திட்டத்தை அறிவித்தது. புதிய ஆயுதங்களில் ஹிமார்ஸ் எதிர்ப்பு ரொக்கெட்கள் மற் றும் அவற்றுக்கான வெடி மருந்துகள், விமானத்தை சுட்டு வீழ்த்தும் திறன் கொண்ட நாசம்ஸ் ஏவுகணைகள் உள்ளிட்டவை அடங்கியுள் ளன.

இவ்வாறான உதவிகளுடன் உக்ரைனில் ரஷ்யாவால் ஆக் கிரமிக்கப்பட்ட சுமார் 6,000 சதுர கி.மீ. பகுதிகளை (2,400 சதுர மைல்) தமது படைகள் மீட்டுள்ளதாக உக்ரைன் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் இரவு வீடியோ உரையில் பேசிய வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, இந்த மாத தொடக்கத்தில் இருந்து உக்ரைனின் தெற்கி லும் கிழக்கிலும் 6,000 சதுர கிலோமீட்டருக்கும் அதிக மான நிலப்பரப்பை எங்கள் வீரர்கள் விடுவித்துள்ளனர் என்று கூறினார்.

எங்கள் படைகள் ரஷ்யா வின் ஆக்கிரமிப்புகளை முறிய டித்து தொடர்ந்து முன்னேறி வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

(அ)

# பிரிட்டனின் அழைப்பை ஏற்றுக்கொண்ட பைடன்!



வொஷிங்ரன், செப். 14

இரண்டாம் எலிசபெத் மகாராணி யின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளு மாறு பிரித்தானிய அழைப்பை அமெ ரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஏற்றுக் கொண்டுள்ளார்.

எதிர்வரும்19ஆம் திகதி நடைபெறும் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்கான அழைப்பை அமெரிக்க ஜனாதிபதி முறைப்படி ஏற்றுக்கொண்டதாக வெள்ளை மாளிகை அறிக்கை ஒன்றில் அறிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி 18 ஆம் தேதி நியூயோர்க்கிற்குச் செல் வார் என்றும், 19 ஆம்,20 ஆம் திகதிகளில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் வருடாந்த அமர்வில் கலந்துகொள் வார் என்றும் வெள்ளை மாளிகை முன்னதாக அறிவித்திருந்தது.

இந்நிலையில், இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கு வரும் 19ஆம் திகதி நடைபெற உள்ள நிலையில், இதில் பங்கேற்பதாக பல நாடுகளின் அரச தலைவர்கள் ஏற்கனவே அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# ரஷ்யா கைப்பற்றிய 6,000 சதுர கி.மீ. பகுதியை மீட்ட உக்ரைன் படைகள்

கீவ், செப். 14

உக்ரைனில் ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்ட சுமார் 6,000 சதுர கி.மீ. பகுதிகளை (2,400 சதுர மைல்) தமது படைகள் மீட்டுள்ளதாக உக்ரைன் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் இரவு வீடியோ உரையில் பேசிய வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, இந்த மாத தொடக்கத்தில் இருந்து உக்ரைனின் தெற்கிலும் கிழக்கிலும் 6,000 சதுர கிலோமீட்டருக்கும் அதிகமான நிலப்பரப்பை எங்கள் வீரர்கள் விடுவித்துள்ளனர் என்று கூறினார்.

எங்கள் படைகள் ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக ளை முறியடித்து தொடர்ந்து முன்னேறி வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, உக்ரைன் படைகளின் அண் மைய வெற்றிகள் ரஷ்ய தேசியவாதிகளை கடும் சீற்றமடையச் செய்துள்ளது. இது புடின் தலை மையிலான அரசுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

உக்ரைன் போரில் இறுதி வெற்றியை உறுதி செய்ய உடனடியாக மாற்றங்களைச் செய்யுமாறு ரஷ்யாவுக்குள் இருந்து அழைப்புகள் எழுந்துள்ளன.

மார்ச் மாதம் உக்ரேனிய தலைநகர் கீவ்வை ஆக்கிரமிக்கும் முயற்சி கைகூடாததை அடுத்து, உக்ரைன் படைகள் அங்கிருந்து விலக்கிக்கொள் ளப்பட்டன. தொடர்ந்து கார்கிவ் மாகாணத்தில் இசியம் நகரம் உட்பட பல முக்கிய பகுதிகளை உக்ரேன் படைகள் ரஷ்யாவிடம் இருந்து கடந்த சில நாட்களில் மீட்டுள்ளன.

இவ்வாறு ரஷ்யப் படைகள் உக்ரைனில் தோல்விகளை சந்தித்து வரும் நிலையில் உக்ரைன் போரில் இறுதி வெற்றியை உறுதி செய்ய உடனடியாக மாற்றங்களைச் செய்யுமாறு ரஷ்யா போர் நடவடிக்கையில் முக்கிய தலைமை புள்ளியாக இருக்கும் செச்சென் குடியரசின் தலை வர் ரம்ஜான் கதிரோவ் அழைப்பு விடுத்துள்ளார்.

இதேபோன்று மோதலின் முன்னணி போர் முனைகளை ரஷ்யா இழந்து வருவது குறித்து உக்ரைனின் கிழக்கு டான்பாஸ் பகுதியில் 2014 ஆம் ஆண்டு போரைத் தொடங்க உதவிய ஒரு தேசியவாத போராளியும் முன்னாள் மத்திய பாதுகாப்பு சேசை அதிகாரியுமான இகோர் கிர்கின் கடுமையாக விமர்சித்துள்ளார்.

இதனை 1905 ஆம் ஆண்டு முக்டென் போருடன் அவர் ஒப்பிட்டார். இது ரஷ்ய- ஜப்பானியப் போரில் பேரழிவுகரமான தோல்வி யாகும். ரஷ்யாவின் 1905 புரட்சியைத் தூ ண்டியது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான தோல்விகள் குறித்த விமர்சனங்களுக்கு மத்தியில் கார்கிவ் மற்றும் டொனெட்ஸ்க் உள்ளிட்ட கிழக்குப் பிராந்தியங்களுக்கு ரஷ்யா கூடுதல் படைகளை அனுப்பியுள்ளதாக அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. அத்துடன், இந்தப் பிராந்தியங்களில் ரஷ்யா உக்கிர ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இவ்வாறான உக்கிர தாக்குதல் காரணமாக காரணமாக கார்கிவ் மற்றும் டொனெட்ஸ்க் உள்ளிட்ட பகுதிகளில் மின் கட்டமைப்புகள் செயலிழந்து, சுமார் ஒன்பது மில்லியன் மக்கள் மின்சாரத்தை இழந்து இருளில் மூழ்கியுள்ளனர்.

(அ)




# ரோஹித் சர்மா புதிய மைல்கல்!

புதுடில்லி, செப். 14

அனைத்து இருபது -20 உலகக் கிண்ண இந்திய அணிகளிலும் இடம்பிடித்த ஒரே வீரர் என்கிற பெருமையை அடைந்துள்ளார் அந்த அணியின் தற்போதைய தலைவரான ரோஹித் சர்மா.

ஒக்ரோபர் 16 முதல் நவம்பர் 13 வரை 2022 இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டி அவுஸ்திரேலியாவில் நடைபெறுகிறது. இதில் பங்கேற்கவுள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில், பும்ரா, ஹர்ஷல் பட்டேல் அணியில் மீண்டும் இடம்பிடித்துள்ளார்கள். அஸ்வின், தினேஷ் கார்த்திக் ஆகிய தமிழக வீரர்கள் அணியில் இடம் பெற்றுள்ளார்கள்.

இம்முறை, இருபது - 20 உலகக் கிண்ண அணியில் இடம்பெற்றதன் மூலம் ரோஹித் சர்மா ஒரு சாதனையை நிகழ்த்தியுள்ளார். 2007, 2009, 2010, 2012, 2014, 2016, 2021, 2022 என அனைத்து இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான இந்திய அணிகளிலும் ரோஹித் சர்மா இடம்பெற்றுள்ளார்.

இந்தப் பெருமை வேறு எந்த இந்திய வீரருக்கும் கிடையாது. இந்தமுறை முதல்முறையாக இந்திய அணியின் கேப்டனாக இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டியில் களமிறங்குகிறார். 2007 இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டியில்தான் சர்வதேச இருபது - 20 கிரிக்கெட்டுக்கு அறிமுகமானார்.

இந்திய அணியில் உள்ள மூத்த வீரர்களில் கோலி, தினேஷ் கார்த்திக் போன்றோர் உள்ளார்கள். விராட் கோலி 2010 முதல்தான் இந்திய அணிக்காக இருபது - 20 கிரிக்கெட்டில் விளையாடி வருகிறார். ஆனால், 2012இல்தான் முதன்முறையாக இருபது - 20 உலகக் கிண்ணத்தில் விளையாடினார்.

தினேஷ் கார்த்திக் 2007, 2009, 2010 ஆகிய மூன்று இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடியுள்ளார். (ஐ)



# சென்னை ஓப்பன் ரென்னிஸ் பௌச்சர்ட் அடுத்த சுற்றில்!

சென்னை, செப். 14

சென்னை ஓப்பன் மகளிர் ரென்னிஸ் போட்டியின் 2ஆவது சுற்றுக்கு கனடாவின் ஈகியுனி பௌச்சர்ட் முன்னேறினார்.

சென்னை ஓப்பன் மகளிர் ரென்னிஸ் போட்டி நுங்கம்பாக்கத்தில் தொடங்கியது. இதில் ஒற்றையர் பிரிவில் கனடாவின் ஈகியுனி பௌச்சர்ட் 167ஆம் நிலை வீராங்கனையான சுவிற்சர்லாந்தின் ஜோனா ஜூகரை எதிர்த்து விளையாடினார். இதில் முதல் செற்றில் ஜோனா ஜூகர் கடும் சவால் அளித்தார்.

ரை பிறேக்கர் வரை சென்ற இந்த செற்றை ஈகியுனி பௌச்சர்ட் 7-6 (6-4) என கைப்பற்றினார். 2ஆவது செற்றில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஈகியுனி பௌச்சர்ட் 6-2 என எளிதாக வசப்படுத்தினார். முடிவில் ஒரு மணி நேரம் 44 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 7-6 (6-4), 6-2 என்ற நேர் செற்றில் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (ஐ)




கிரிக்கெட், வலைப்பந்தாட்டப் போட்டிகளின் ஆசியக் கிண்ணங்களைக் கைப்பற்றி நாடு திரும்பிய அணிகளுக்கு நேற்று ரசிகர்கள் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு அணிகளை வரவேற்றனர்...!




# நான் அணித் தலைவராவது கிரிக்கெட் ஆஸியின் கையில்! டேவிட் வோர்ணர்

சிட்னி, செப். 14

நான் தலைவராவது கிரிக்கெட் அவுஸ்திரேலியாவின் முடிவிலேயே உள்ளதென அவுஸ்திரேலியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்ணர் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து அரோன் பின்ஞ் ஓய்வை அறிவித்த பிறகு அடுத்த அணித் தலைவராக யார் பொறுப்பேற்பார்கள் என்ற கேள்வி எழுந்துள்ளது.

2018இல் கேப்டவுனில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் பந்தை சேதப்படுத்தியதற்காக வோர்ணர், ஸ்மித், பென்கிராப்ட் ஆகியோர்மீது கிரிக்கெட் அவுஸ்திரேலியா கடுமையான நடவடிக்கை எடுத்தது. வோர்ணருக்கு அணித் தலைவராக வாழ்நாள் தடையும் ஸ்மித்துக்கு ஒரு வருட தடையும் விதித்தது.

இந்நிலையில், அணித் தலைமைத்துவம் தொடர்பில் வோர்ணர் கூறுகையில்,

எனக்கு பக்கத்தில் உள்ள டெஸ்ட் அணித் தலைவருக்குதான் முதல் வாய்ப்பு. என்னுடைய அலைபேசி பக்கத்திலேயேதான் இருக்கிறது. கிரிக்கெட் அவுஸ்திரேலியா தலைமை பற்றி ஏதாவது கேட்டால் உடனே பதிலளிக்க ஆவலாக இருக்கிறேன். கடந்த காலத்தில் செய்தது அத்துடன் முடிந்துவிட்டது. நான் இப்போது மகிழ்ச்சியாக இருக்கிறேன். என்னுடைய சிறந்த ஆட்டத்தை அணிக்காக கொடுக்க எப்போதும் முயற்சித்து வருகிறேன்.

நான் அணித் தலைவராக வேண்டுமென கிரிக்கெட் அவுஸ்திரேலியா நினைத்தால் அது எனக்கு கௌரவம். அது அவர்கள் கையிலே உள்ளது. இப்போது என்னால் துடுப்பாட்டத்தில் எவ்வளவு ஓட்டங்களைக் குவிக்க முடியுமோ அதில் மட்டுமே கவனம் செலுத்தி வருகிறேன் - என்றார். (ஐ)

# பாடசாலைகள் கிரிக்கெட் சென். ஜோன்ஸ் வெற்றி!

கொழும்பு, செப். 14

இலங்கையின் 19 வயதின் கீழ் டிவிஷன் - 2 பாடசாலை அணிகளுக்கு இடையிலான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற போட்டியில், சென்.ஜோன்ஸ் கல்லூரி 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.

அம்பலாங்கொடையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் சிறீ தேவானந்த கல்லூரியை எதிர்த்தாடிய, சென். ஜோன்ஸ் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடியது.

சென். ஜோன்ஸ் கல்லூரியின் ஆரம்பம் ஓரளவுக்கு சிறப்பாக இருந்தாலும், மத்திய ஓவர்களில் விக்கெட்டுகள் விட்டுக்கொடுக்கப்பட்டமை மற்றும் குறைந்த ஓட்டவேகத்தின் காரணமாக 46 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்களையும் இழந்து 144 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

சென். ஜோன்ஸ் அணிசார்பாக அதிகபட்சமாக அண்டர்சன் சச்சின் கணபதி 34 ஓட்டங்களையும், கமலபாலன் சபேசன் 27 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். பந்துவீச்சில், சிறீ தேவானந்த கல்லூரி சார்பாக சிதும் விதானகே 4 விக்கெட்களை வீழ்த்தினார்.

சென். ஜோன்ஸ் அணி துடுப்பாட்டத்தில் சற்று தடுமாற்றத்தை எதிர்கொண்டிருந்தபோதும், பந்துவீச்சில் அற்புதமான முறையில் செயற்பட்டிருந்தது. ஆரம்ப பந்துவீச்சாளர்களான அன்ரன் அபிஷேக், யோகதாஸ் விதுசன் மற்றும் கிருபானந்தன் கஜகர்ணன் ஆகியோர் மிகச்சிறந்த ஆரம்பத்தை பெற்றுக் கொடுத்தனர். ஜெயச்சந்திரன் அஸ்நாத் மற்றும் மோகனராசா கமல்ராஜ் ஆகியோர் சிறப்பாக பந்து வீசி தங்களுடைய பங்களிப்பை வழங்கினர்.

இந்தநிலையில் சென்.ஜோன்ஸ் அணியின் சிறந்த பந்துவீச்சுக்கு தாக்குபிடிக்கமுடியாமல் சிறீ தேவானந்த கல்லூரி அணி 30.1 ஓவர்கள் நிறைவில் 99 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்தது. சிறீ தேவானந்த கல்லூரி சார்பாக சிதும் விதானகே 28 ஓட்டங்களையும், காஞ்சன டி லிவேரா 25 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில் அன்ரன் அபிஷேக், யோகதாஸ் விதுசன் மற்றும் கிருபானந்தன் கஜகர்ணன் ஆகியோர் தலா 3 விக்கெட்களை வீழ்த்தினர்.

இதேவேளை யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி கடந்த 8ஆம் திகதி நடைபெற்றிருந்த முதல் போட்டியில் களுத்துறை வித்தியாலயத்தை 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றிபெற்றிருந்தது.

குறித்த இந்தப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய களுத்துறை வித்தியாலய அணி, 49. 2 ஓவர்கள் நிறைவில் 164 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்திருந்தது. களுத்துறை அணிசார்பாக சமோத் தனஞ்சய 37 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றுக்கொள்ள, பந்துவீச்சில் யோகதாஸ் விதுசன் மற்றும் ஜெயச்சந்திரன் அஸ்நாத் ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

பின்னர் களமிறங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரி சார்பாக அண்டர்சன் சச்சின் கணபதி 50 ஓட்டங்களையும், அன்ரன் அபிசேக் 58 ஓட்டங்களையும் பெற 6 விக்கெட்கள் கைவசமிருக்க 38.2 ஓவர்கள் நிறைவில் சென். ஜோன்ஸ் அணி வெற்றியை தக்கவைத்தது. (ஐ)

# மேலும் சிலருக்கு அமைச்சுப் பதவி

கொழும்பு, செப். 14
எதிர்வரும் நாட்களில் மேலும் சில அமைச்சரவை அமைச்சர்கள் நியமிக்கப்பட வுள்ளதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். இராஜாங்க அமைச்சராக தேனுக்க விதானகமகே தமது கடமைகளை பொறுப்பேற்று கொண்டபோது அதில் கலந்துகொண்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைக் குறிப்பிட்டார்.

பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது எனவும் அவர் மேலும் கூறினார்.

தற்போது இராஜாங்க அமைச்சர்களாக பொறுப்பேற்றுள்ளவர்கள், பாராளுமன்ற உறுப்பினருக்கான வேதனத்தை மாத்திரமே பெற்று செயற்படுகின்றனர். மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அவர்களுக்கு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டார். (அ)

# ஒரு முட்டையை 50 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்வோர் மீது வழக்கு!

கொழும்பு, செப். 14
அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்த 80 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஒரு முட்டையை 50 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்யும் வர்த்தகர்களை கண்டுபிடிக்கச் சோதனை நடத்தப்படும் என்று அதன் தலைவர் சாந்த நிரியல்ல தெரிவித்தார்.

தொடர்ந்து அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்யும் வியாபாரிகளை கண்டுபிடிக்கச் சோதனை நடத்தப்படும் என்றும் தலைவர் சாந்த நிரியல்ல குறிப்பிட்டார். (அ)

# அப்பியாச கொப்பிகளின் விலை வெகுவாக உயர்வு

கொழும்பு, செப். 14
நாட்டில் காகிதத் தட்டுப்பாடு நிலவுவதாகவும், கடன் பத்திரங்களை வழங்குவதற்கு வங்கிகள் பணத்தை வழங்க மறுப்பதால் நிலைமை மோசமாக இருப்பதாக அகில இலங்கை சிறு கைத்தொழில் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் நிருக்ஷ குமார தெரிவித்துள்ளார்.

இதன் விளைவாக, 120 பக்க கொப்பி முன்னர் ரூ. 120 இருந்த நிலையில் இப்போது ரூ. 225 உள்ளது. முன்னர் 80 பக்க கொப்பியின் விலை ரூ. 75 இருந்த நிலையில், அதன் விலை ரூ. 100 அதிகரித்துள்ளது.

40 பக்க கொப்பியின் விலை ரூ.65 இருந்து ரூ.180 ஆக அதிகரித்துள்ளது.

40 பக்க சி.ஆர் கொப்பியின் புதிய விலை ரூ. 150 முதல் ரூ. 290 வரை உள்ளது.

40 பக்கங்கள் கொண்ட வரைதல் கொப்பியின் விலையும் அதன் முந்தைய விலையான ரூ. 115 இருந்து ரூ. 230 ஆக உயர்வடைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இலங்கை உடன் நீக்கவேண்டும்!

## ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தல்

ஜெனிவா, செப். 14

**ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் ஆரம்ப நாளான நேற்றுமுன்தினம் உரையாற்றிய ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள், சர்வதேச மனித உரிமைகள் சட்டங்கள் மற்றும் நியமங்களுக்கு முழுமையாக இணங்கும் வரை பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இடைநிறுத்துமாறு வலியுறுத்தினர்.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நேற்று முன்தினம் உரையாற்றிய ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள், அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான தேவையற்ற பலாத்காரத்தைப் பயன்படுத்துவதைக் கண்டித்தனர்.

பொறுப்புக்கூறல் மற்றும் தண்டனையின்மையில் இருந்து விடுபடுவதற்கான உடனடி நடவடிக்கைகளுக்கு இலங்கைக்கு அவர்கள் அழைப்பு விடுத்தனர்.

அதேநேரம் இலங்கை தொடர்பான அறிக்கைக்காக, மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துக்கு ஐரோப்பிய ஒன்றியம் தனது நன்றியை தெரிவித்தது.

அத்துடன் இலங்கையில் மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றுக்கான தங்கள் உறுதிப்பாட்டையும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்படக்கூடிய மற்றும் ஒதுக்கப்பட்ட சூழ்நிலைகளில் உள்ள நபர்கள் மற்றும் குழுக்கள் மற்றும் அனைவரின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை திறம்பட மற்றும் சமமாக நிறைவேற்றுவதற்கான அவசியத்தையும் ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# பளைப் பிரதேசத்தில் காணிகள் இராணுவத்துக்கு வழங்கப்படாது

## கூறுகின்றார் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், செப். 14
பளை பிரதேசத்தில் உள்ள எல்.எல்.ஆர்.சி. காணிகளை இராணுவத்திற்கு வழங்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதான செய்திகளில் உண்மையில்லை என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மக்கள் மத்தியில் உணர்வு ரீதியான குழப்பங்களை ஏற்படுத்தி சுயலாப அரசியல் ஆதாயம் தேடும் தரப்புக்களினால் கட்டவிழ்த்து விடப்படுகின்ற இவ்வாறான செய்திகள் தொடர்பில் ஊடகங்கள் அவதானமாக செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

மேலும், சில ஊடகங்களில் வெளியான குறித்த செய்தி தொடர்பாக நேற்றைய அமைச்சரவை கூட்டத்தில் வினவிய போது, துறைசார்ந்த அமைச்சர்களுக்கு இதுதொடர்பான எந்தவொரு திட்டங்களும் இல்லை என்பதை அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அத்துடன், பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பளைப் பிரதேசத்தில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக் குழுவிற்கு சொந்தமான காணிகளை கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களை சேர்ந்த காணிகளற்ற மக்களுக்கும், காணாமல் போனவர்களின் நேரடி உறவினர்களில் காணிகள் அற்றவர்களுக்கும் வழங்க வேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தாமரை கோபுர செயல்பாடு 15 ஆம் திகதி முதல் ஆரம்பம்

கொழும்பு, செப். 14
தெற்காசியாவின் மிக உயர்ந்த கட்டடமான 'தாமரை கோபுரத்தின்' செயல்பாடுகள் நாளை வியாழக்கிழமை முதல் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதற்கமைய கட்டணங்களை செலுத்தி சகலருக்கும் தாமரை கோபுரத்திற்குள் பிரவேசித்து அதனை பார்வையிடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக கொழும்பு லோட்டஸ் டவர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் ஆர்.எம்.பி. ரத்நாயக்க தெரிவித்தார்.

தாமரை கோபுரத்தின் செயற்பாடுகள் மீள ஆரம்பமாகவுள்ள நிலையில் அது தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தாமரை கோபுர கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இதன்போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பின்னர் தாமரை கோபுரத்தை பார்வையிடுவதற்கு பொது மக்கள் அனுமதிக்கப்படுவார்கள். கட்டணங்களை செலுத்தி பெற்றுக் கொள்ளும் நுழைவுச் சீட்டு மூலம் சகல பகுதிகளுக்கும் சென்று பார்வையிட முடியும். பிரவேச அட்டைக்கான கட்டணங்கள் 500 மற்றும் 2000 ரூபாவாகும்.

500 ரூபாய் செலுத்துபவர்கள் குழுக்களாக அழைத்துச் செல்லப்படுவார்கள். 2000 ரூபாய் செலுத்துபவர்கள் தனியாக செல்ல அனுமதிக்கப்படுவர்கள்.

இவர்கள் வரிசையில் காத்திருந்து செல்ல வேண்டி ஏற்படாது. பார்வையிட வரும் வெளிநாட்டவர் ஒருவருக்கான நுழைவுச் சீட்டு 20 அமெரிக்க டொலர்களாகும். அடுத்த சில மாதங்களில் நுழைவுச் சீட்டுக்கு பதிலாக கியூ.ஆர். தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

2000 ரூபாவை செலுத்துபவர்களுடன் வருகை தரும் 12 அல்லது 12 வயதுக்கு குறைந்த சிறுவர்களுக்கு 500 ரூபாவும், 500 ரூபா செலுத்துபவர்களுக்கு 200 ரூபாவும் அறவிடப்படும்.

பாடசாலை மாணவர்களுக்கும் 200 ரூபா கட்டணம் அறவிடப்படும். தாமரை கோபுர வருகை தொடர்பில் பாடசாலை நிர்வாகத்தினால் முன்னரே அறிவிக்கப்படவேண்டும். அவ்வாறு அறிவிக்கப்பட்ட தன் பின்னர் அவர்களுக்காக பிரத்தியேக நேரம் ஒதுக்கிக் கொடுக்கப்படும்-என்றார். (அ)

# உடன் தேர்தலை நடத்தவேண்டும்!

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, செப். 14
"நாட்டை மீட்பதைவிடவும், ஆட்சியை தக்க வைத்துக் கொள்வதே ஆட்சியாளர்களின் இலக்காக இருக்கின்றது. எனவே, நாடாளுமன்றத்தை கலைத்து உடன் தேர்தலை நடத்தவும்."

-இவ்வாறு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார-

விவசாயிகள், மீனவர்கள் உட்பட நாட்டு மக்கள் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், நாட்டை பொருளாதார ரீதியில் மீட்பதைவிட, அதிகாரம் குறித்த ஆளுங்கட்சி அதிகம் சிந்திக்கின்றது. அதனால்தான் இருப்பை தக்க வைத்துக்கொள்ள மக்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குறுகியதொரு அமைச்சரவையுடன் நாட்டை மீட்பதற்கான திட்டங்களை வகுக்கலாம். ஆனால் அதற்கான எண் ணம் இந்த அரசாங்கத்திடம் இல்லை. எனவே, நாடாளுமன்றத்தை கலைத்து, மக்கள் ஆணையுடன் புதியதொரு அர சாங்கம் உதயமாக, தற்போ தைய ஆளுங்தரப்பு இடம ளிக்க வேண்டும். தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும்-என்றார். (அ)

## இலங்கைமீது...

பயன்படுத்தப்படுவது நிறுத்தபட வேண்டும். இதன்மூலம் தற்போதும் நடைபெறும் துஷ்பிரயோகங்களுக்கு தீர்வு காண இலங்கையை வலியுறுத்த வேண்டும். இலங்கை, கடுமையான பொருளாதார, அரசியல் மற்றும் மனித உரிமைகள் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றது. கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகலுக்குப் பின்னர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ரணில் விக்கிரமசிங்க கருத்து சுதந்திரம், அமைதியான ஒன்றுகூடல்களை நசுக்கத் தவறான பாதுகாப்பு நடவடிக்கைகளை கையாண்டார்.

இலங்கையில் கடந்தகால சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்கள் பல ஆண்டுகளாக நீதி கேட்டு வருகின்றனர். அதேநேரத்தில் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் வாக்குறுதிகளை மீறி, பொறுப்புக்கூறலைத் தடுத்து சம்பந்தப்பட்டவர்களை காப்பாற்றுவதுடன் அவர்களை ஊக்குவித்தும் வருகின்றன. மேலும், போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு உயர் பதவிகள் வழங்கப்படுகின்றன - என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி தெரிவித்தார்.

இந்தநிலையில், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை, பொறுப்புக்கூறல் மற்றும் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தும் வகையில், இலங்கை மீது அழுத்தம் கொடுக்கும் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இலங்கையில் இழைக்கப்பட்ட சர்வதேச குற்றங்களுக்கான ஆதாரங்களை சேகரித்து எதிர்கால வழக்குகளில் பயன்படுத்துவதற்காக 2021இல் மார்ச்சில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மதிப்பாய்வு செய்து புதுப்பிக்க வேண்டும். இதேநேரம் நாட்டின் தற்போதைய நிலையயும் கண்காணித்து அறிக்கை அளிப்பதுடன் வலுவான தீர்மானம் இயற்றப்பட வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச சட்ட வல்லுநர்கள் ஆணைக்குழு ஆகியன வலியுறுத்தியுள்ளன.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் பயங்கரவாத தடுப்பு சட்டத்தை தடை செய்வதாகக் கூறினார். ஆனால், போராட்டங்களை கலைக்க இராணுவம் பயன்படுத்தப்பட்டது. இதில் பங்கேற்ற ஏராளமானவர்கள் கைது செய்யப்பட்டனர். மூன்று மாணவர் தலைவர்கள் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதேசமயம், கடந்த 8ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்க மனித உரிமைகள் மீறல்களுடன் தொடர்புடைய மூவரை இராஜாங்க அமைச்சர்களாக நியமித்துள்ளார். பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன். விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினரான இவர் பின்னர் அரச ஆதரவு ஆயுதக் குழுவில் இணைந்தார். கடத்தல்கள், சிறுவர்களை படைக்கு சேர்த்தல் மற்றும் 2005ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொலை தொடர்பில் இவர் சந்தேகநபர்.

மற்றையவர் லொஹன் ரத்வத்த. இவர் தமிழ் அரசியல் கைதிகளை துப்பாக்கி முனையில் மிரட்டியிருந்தார். இதையடுத்து அவர் 2021 செப்ரெம்பரில் தனது பதவியை துறந்தார்.

இதேபோல் சனத் நிஷாந்த, மே 9 அரசாங்கத்துக்கு எதிராக போராட்டம் நடத்தியவர்கள்மீது வன்முறை தாக்குதல்களை நடத்தியமை தொடர்பில் இவர் மீது விசாரணை உள்ளது. இந்த அமைச்சு நியமனங்கள் விக்கிரமசிங்க நிர்வாகம் மனித உரிமைகள் மீறல்களுக்கு நம்பகத்தன்மையான பொறுப்புக்கூறலை தொடரும் அல்லது சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டும் என்று எதிர்பார்க்க முடியாது என்பதை வெளிக்காட்டுகின்றன என்று ஃபோரம் ஆசியா கூறியுள்ளது.

பழிவாங்கல் அல்லது கைதுக்கு அஞ்சாமல் சுதந்திரமாகவும் அமைதியாகவும் போராட்டம் நடத்த தங்கள் கருத்துகளை வெளிப்படுத்த மக்களுக்கான உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். சமீப போராட்டங்களில் பங்கேற்ற அல்லது ஆதரித்ததாக நம்பப்படும் நபர்கள் மீதான துன்புறுத்தல் - மிரட்டல் - தன்னிச்சையான கைதுகள் நிறுத்தப்பட வேண்டும்.

பயங்கரவாத சட்டத்தை இரத்து செய்தல், அதன் பயன்பாட்டுக்கு உடனடி தடை, அந்த சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை மறுபரிசீலனை செய்தல், விடுதலை செய்தல், இந்தச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரையும் உறுதிப்படுத்தல், விசாரணைக்கு முந்தைய தடுப்பு காவலில் ஒரு வழக்கமான நீதிமன்றத்தில் உடனடியாகவும் நியாயமாகவும் விசாரிக்கப்படுதல், நீதித்துறை மற்றும் மனித உரிமைகள் ஆணையத்தின் சுதந்திரம் உறுதிப்படுத்தல் என்பவற்றை சர்வதேச மன்னிப்பு சபை வலியுறுத்தியுள்ளது.

“இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் மனித உரிமைகள் பேரவையில் உறுதியளித்தவற்றை நாங்கள் மீண்டும் மீண்டும் பார்க்கிறோம், அவை முறியடிக்கப்பட்டன அல்லது மறுக்கப்படுகின்றன,” என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசியப் பணிப்பாளர் யாமினி மிஸ்ரா தெரிவித்தார்.

“உறுப்பு நாடுகள் இலங்கைக்கு அதன் உறுதிப்பாடுகள்மீது அழுத்தம் கொடுக்க வேண்டும் மற்றும் நடப்பு துஷ்பிரயோகங்களை முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும், இதே நேரத்தில் நிலைமையை கண்காணிக்கவும் மற்றும் கடந்தகால துஷ்பிரயோகங்களுக்கு பொறுப்புக்கூறலை தொடரவும் ஐ. நாவின் கட்டளைகளை புதுப்பிப்பது அவசியம்” - என்றும் யாமினி மிஸ்ரா கூறினார். (ஐ)

## இரு...

பாக பதில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண கூறினார்.

தற்காலிகமாக சில பொருட்களின் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இறக்குமதிகளுக்கு விதிக்கப்பட்ட தடை இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை திருத்தப்படுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக இறக்குமதி கட்டுப்பாடு அமுலில் உள்ளது. இந்தப் பிரச்னை தீர்க்கப்பட்டதும் அனைத்துக் கட்டுப்பாடுகளும் நீக்கப்படும். இந்தத் தடை காரணமாக சில தொழில்களில் தடைகள் ஏற்பட்டுள்ளன - என்றும் அவர் இதன்போது தெரிவித்தார். (ஐ)

## 18 மணிநேர...

குறிஞ்சாமுனையில் இடம்பெற்ற வாகன விபத்தில் 88 வயதான பெண் ஒருவர் உயிரிழந்தார்.

புறக்கோட்டை பஸ் தரிப்பு நிலையத்துக்கு முன்பாக மோட்டார் சைக்கிளுடன் மோதி முகத்துவாரம் பகுதியை சேர்ந்த 77 வயதான ஒருவர் உயிரிழந்தார்.

மிரிஹான தெல்கந்தை முச்சந்தியில் கார் ஒன்றுடன் மோதி ஒருவர் உயிரிழந்தார். வென்னப்புவ கார் மோதியதில் பாதசாரி ஒருவர் உயிரிழந்தார்.

இதேபோன்று கொக்கலெல்லை, மின்னேரியா, சிகிரியா ஆகிய இடங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் மூவர் உயிரிழந்தனர். (ஐ)

## திருக்கோணேஸ்...

ஆட்சி அரசியல்வாதியாகத் திருக்கோணேச்சரத்தில் தம் தோல்வியை ஒப்புக்கொண்டு பதவி விலகியவர் மு. திருச்செல்வம். எனக்கு அவரே அரசியல் குரு. நீலன் திருச்செல்வத்தின் தந்தையார் அவர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திருக்கோணேச்சரத்தைக் காப்பதற்கு முயற்சி எடுக்கும் ஆட்சி நிலை அரசியல்வாதி. இடையில் அமைச்சர் நிலையில் உள்ள வேறு எவராவது முயற்சி எடுத்தாரா? என்பதற்கு என்னிடம் சான்று இல்லை.

அமைச்சர் திருச்செல்வத்துக்கு இல்லாத வலிமையும் திறமையும் திருக்கோணச்சரத்தைக் காப்பதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு உள. தேவானந்தாவின் பெரியப்பா கே. சி. நித்யானந்தாவும் நானுமாகத் திருக்கோணேச்சரத்தை எவ்வாறு காக்கலாம் எனப் பலருடன் பேசி இருக்கிறோம். பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். எதிலும் வெற்றி பெற முடியவில்லை.

அமைச்சரின் முயற்சியைப் பாராட்டுகிறேன். முதல் நிலைத் தடைகளைத் தாண்டி உள்ளார். அடுத்த நிலைத் தடைகளையும் தாண்டுவார்.

இராவணன் வழிபட்ட திருக்கோயில். இராமர் வழிபட்ட திருக்கோயில். இராமாயண கால திருக்கோயில். பூமிப் பந்தில் இன்று வாழ்கின்ற 120 கோடி இந்துக்களுக்கு உரிமைக் கோயில். தமிழகத்தின் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள், தமிழகத்து சிவனடியார்கள் என வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் திருகோணேச்சரம் வந்து வழிபட்டனர். தமது இலச்சினைகளையும் முத்திரைகளையும் கல்வெட்டாக்கிச் சென்றுள்ளனர்.

“நிரைகழல் அரவம்” எனத் தொடங்கும் திருப்பதிகம் சுந்தரர் பாடியது. அவருக்குப் பின் அருணகிரிநாதர் பாடி உள்ளார். ஈழத்து சிவனடியார்கள் அறிஞர்கள் கவிஞர்கள் பலர் திருக்கோணேச்சரத்தைப் பாடியுள்ளனர். முழுக்க முழுக்கச் சைவர்கள் வழிபட்டுச் சைவர்கள் திருப்பணி செய்து சைவர்களே பராமரித்த திருக்கோயிலே திருகோணேச்சரம். பூமிப் பந்தில் வாழ்கின்ற 120 கோடி இந்துக்களுக்கு உரித்தான கோயில் திருக்கோணேச்சரம்.

சாத்தான் கோயில் என்று கூறித் திருகோணச்சரத்தை வரலாற்றில் முதல் முறையாக இடித்தவர்கள் தரைமட்டமாக்கியவர்கள் அக்கோயிலின் கருங்கற்களைக் கொண்டு கோட்டை கட்டியவர்கள் அரக்கராகிய கத்தோலிக்கர். இந்த வரலாற்றுப் பின்னணியில் திருக்கோணேச்சரத்தைக் காப்பாற்றுகின்ற பெரும் முயற்சியில் அமைச்சர் தேவானந்தா ஈடுபட்டுள்ளார்.

தேவானந்தாவால் முடியும். மேதை கே. சி. நித்யானந்தா வழி வழிச் சைவ அடியவர் அல்லவா? தேவானந்தா வழிகளைக் கண்டுபிடித்துக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை, சிவ சேனைத் தொண்டர்களுக்கு உண்டு அவரின் திறமை ஆற்றல் செயல் வேகம் யாவிலும் நம்பிக்கை சிவசேனையில் உள்ளவர்களுக்கு உண்டு - என்றுள்ளது. (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 12இல்)

## செப்ரெம்பர்-19...

பொது நிர்வாகம் மற்றும் உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

அன்றைய தினம், தேசிய துக்க தினமாக முன்னதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அரசாங்கத்தின் அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்கு அரசாங்க விடுமுறை தினம் தடையாக இருக்கமாட்டாது என பொதுநிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பாடசாலை பாடத் திட்டத்தில் அடுத்த வருடம் முதல் மாற்றம்

கொழும்பு, செப். 14

பாடசாலை பாடத்திட்டத்தில் அடுத்த வருடம் முதல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை பௌத்த சங்கத்தினால் நடத்தப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கண்காட்சி மற்றும் முதலீட்டு சந்திப்பில் பிரதம அதிதியாக கலந்து கொண்டபோது அமைச்சர் இதனை கூறினார்.

பரீட்சையை மையமாகக் கொண்டு கல்விக்கு பதிலாக திறமைக்கு முன்னுரிமை அளிப்பதே இந்த சீர்திருத்தத்தின் நோக்கமாகும்.

இதன்மூலம் புதிய படைப்பாளர்களை உருவாக்குவதே இதன் நோக்கம் என அமைச்சர் தெரிவித்தார். (அ)

## ஜெனிவா...

செய்யப்பட்டு பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பேரவையில் பர்க்லர் தனது ஆழ்ந்த கரிசனையை வெளியிட்டிருந்தார். அத்துடன், நல்லிணக்கம், பொறுப்புக்கூறும் கடப்பாடு குறித்தும் அவர் வலியுறுத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பால் புரைக்கேறி...

பரிசோதித்தபோது சிசு உயிரிழந்தமை தெரிய வந்தது. பிரேத பரிசோதனையில் பால் மூச்சுக் குழாயில் புகுந்து புரைக்கேறியமையால் உயிரிழந்தது.

சிசுவின் உயிரிழப்பு தொடர்பில் யாழ். போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார்.

## கோட்டாபயவை...

சிறையில் அடைக்கப்படலாம் என்று செய்தியாளர் சந்திப்பில் ஹிருணிகா கூறினார்.

மக்கள் போராட்டம் மீண்டும் எழத் தொடங்கும்போது இன்னோர் அறகலய வரும். முக்கிய தொழிலதிபர்களின் வீடுகள் ஆதரவற்ற மக்களால் எரிக்கப்படும். பணக்காரர்களுக்கு சொந்தமான அனைத்து செல்வங்களும் ஆதரவற்றவர்களாகி வரும் ஏழைகளால் பறிக்கப்படும் - என்றும் அவர் தெரிவித்தார்.

## மகசின்...

வேண்டும் எனக் கோரி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடந்த 2019ஆம் ஆண்டு, 2020ஆம் ஆண்டு ஆகிய காலப்பகுதிகளின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களில் 5 பேரே மயக்கமடைந்ததைத் தொடர்ந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (அ)

## நடைபெற்றது...

அந்தக் கோரிக்கைகளில் இனப் படுகொலைக்கு சர்வதேச விசாரணை வேண்டும். இலங்கையில் நடைபெற்றது இனப் படுகொலையாகத்தான் பார்க்க வேண்டும் என்ற கோரிக்கை உள்ளடங்கலாக பல அம்சங்கள் இருந்தன.

இந்தப் போராட்டத்தில் வட மாகாண முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன், யாழ்ப்பாண மாநக ரசபை மேயர் மணிவண்ணன், மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தியாகராசா, அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# மனித உரிமை, ஜனநாயக சீர்திருத்தம் இந்த அரசின் கீழ் நடக்க வாய்ப்பில்லை

## ஜெனிவாவில் சட்டத்தரணி நுவான் போபகே சுட்டிக்காட்டு

ஜெனிவா, செப். 14

**ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் கீழ் அர்த்தபூர்வமான மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக சீர்திருத்தங்கள் இடம்பெற வாய்ப்பில்லை என காலி முகத்திடல் போராட்டத்தின் செயற்பாட்டாளரான சட்டத்தரணி நுவான் போபகே ஜெனீவாவில் தெரிவித்துள்ளார்.**

ஆர்ப்பாட்டங்களுக்கு எதிரான அரசாங்கத்தின் வன்முறை நடவடிக்கை ஜனநாயகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொறுப்புக்கூறல்களுக்கான வாய்ப்புகள் குறித்த நம்பிக்கையை பொய்ப்பித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர் தன்னையும் போராட்டத்தில் ஈடுபட்ட பலரையும் கைது செய்து சர்ச்சைக்குரிய பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து



வைத்த சம்பவத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்தப் போவதில்லை என்ற வாக்குறுதிக்கு முரணாக அரசாங்கம் செயற்பட்டுள்ளது என்றும் சட்டத்தரணி நுவான் போபகே தெரிவித்தார்.

மேலும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என கோரிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருவதையும் மனித உரிமைகள் பேரவைக்கு அவர் எடுத்துரைத்தார். (அ)

# தனியார் கல்வி நிலையங்களை ஒழுங்குபடுத்த நடவடிக்கைகள்

நிந்தவூர் செப், 14

கல்முனை மாநகர சபை ஆள்புல எல்லையினுள் இயங்கி வருகின்ற தனியார் கல்வி நிலையங்களில் நிலவும் குறைபாடுகள் தொடர்பில் தொடர்ச்சியாக கிடைக்கப்பெற்று வருகின்ற முறைப்பாடுகளைக் கவனத்தில் கொண்டு, அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக கல்முனை மாநகர முதல்வர் சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்துள்ளார்.

இதன்படி இப்பிரதேசங்களில் தனியார் கல்வி நிலையம் ஒன்றினை நடத்துவதாயின் பூர்த்தி செய்யப்பட வேண்டிய விதிமுறைகள் தொடர்பான அறிவுறுத்தல்களை மாநகர சபை வெளியிட்டியிருப்பதுடன் இவ் விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு வியாபார உத்தரவுப் பத்திர அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

தனியார் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் கடல் அனர்த்த பாதுகாப்பு எல்லையிலிருந்து 100 மீற்றருக்கு அப்பால் அமைக்கப்பட்டிருப்பதோடு அனர்த்தங்கள் ஏற்படும்போது மாணவர்கள் இலகுவாக வெளியேறக் கூடிய நுழைவாயில்களும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இங்கு பிரத்தியேக வகுப்புக்கள் காலை 8.00 மணி தொடக்கம் பி.ப 1.00 மணி வரையும் பிற்பகல் 3.15 மணி முதல் பிற்பகல் 6.15 மணி வரையுமே நடாத்தப்பட வேண்டும்.

வகுப்புக்கள் நடத்தப்படுகின்ற கட்டடத்தின் கூரையானது ஒடு வேயப்பட்டதாகவும் வெப்பமேற்றலை தவிர்க்கக் கூடிய அமைப்பில் அமைந்திருத்தல் வேண்டும். குறித்த கட்டடம் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக திறந்த காற்றோட்டம் உள்ளதாக அமைந்திருத்தல் வேண்டும்.

கதிரை, மேசைகள் வயது வித்தியாசத்திற்கு ஏற்ப சொகுசானதாகவும் பாதுகாப்பானதாகவும் இருத்தல் வேண்டும். ஆண், பெண் இருபாலாருக்குமுரிய மலசல கூட வசதிகள் வெவ்வேறாக அமையப் பெற்றிருத்தல் வேண்டும். மலசல கூட வசதியானது 25 மாணவர்களுக்கு ஒன்று என்ற அடிப்படையில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தேவை ஏற்படின் கோவிட்-19, மற்றும் தொற்று நோய் பரவலை கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாக உட்புறமாக தனிமைப்படுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளையும், அதன் கீழான வர்த்தமானி அறிவித்தல்களையும், சுகாதார விதிகளையும் அதனோடு தொடர்புபட்ட உப விதிகளையும் பின்பற்றல் வேண்டும்.மாணவர்களுடைய வாகனங்கள், சைக்கிள்களை பாதையோரங்களில் நிறுத்தி வைத்து பொதுப் போக்கு வரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுத்தக் கூடாது. தேவை ஏற்படின் தங்களுடைய வளாகத்தினுள்ளேயே வாகனத் தரிப்பிட வசதிகளை ஏற்படுத்தி இருத்தல் வேண்டும். அத்துடன் அயலவர்களுக்கு இடையூறாக அமையக் கூடாது.

பாடசாலையில் பரீட்சை மற்றும் தவணை விடுமுறை வழங்கப்பட்டு, கட்டாயம் ஆகக்குறைந்தது ஒரு வார காலத்திற்கு பின்னரே தனியார் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். மாதத்தில் வரும் எந்தவொரு பொது விடுமுறை தினத்திலும் வெள்ளிக்கிழமை பிற்பகல் வேளைகளிலும் வகுப்புக்களை நடத்துவது கூடாது.

ஒரு பாடம் ஆகக்குறைந்தது 50 நிமிடங்களுக்கு குறையாதவாறு நடாத்தப்பட வேண்டும். ஒரு பாட வேளைக்காக கட்டணம் தரம் 01 முதல் தரம் 05 வரையான வகுப்புக்களுக்கு ஆகக்கூடியது 40 ரூபாவும் தரம் 06 முதல் க.பொ.சா தரம் வரையான வகுப்புக்களுக்கு 50 ரூபாவும் க.பொ.உயர்தர வகுப்புக்களுக்கு 80 ரூபாவுமே அறவிடப்பட வேண்டும். அத்துடன் மாணவர்களிடம் சேர்வுக் கட்டணம் அறவிடப்படக் கூடாது.

கற்பிக்கின்ற பாடங்களின் நேர அட்டவணைகள், ஆசிரியர்களின் விபரங்கள் என்பன உறுதிப்படுத்தப்பட்டு கல்முனை மாநகர சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் போன்ற நிபந்தனைகள் கட்டாயம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என முதல்வர் ஏ.எம்.றகீப் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# கோணேஸ்வர ஆலய விவகாரம் அமைச்சரவையில் எதிரொலிப்பு

கொழும்பு, செப். 14

வரலாற்றுச் சிறப்புமிக்க திருகோணமலை திருக்கோணேஸ்வரம் ஆலயப் பகுதியில் ஆலயத்தின் புனிதத்தைப் பாதிக்கும் வகையிலான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவது தொடர்பாக அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்.

இந்த விடயத்தை ஊடகச் செய்திகள் மூலம் அறிந்து கொண்டதாக இதன்போது தெரிவித்த ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க, நியாயமான முறையில் விடயம் அணுகப்படவேண்டும் என்று குறிப்பிட் டுள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் மத விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சரும் இணைந்து திருகோணமலைக்கு நேரடியாகச் சென்று நிலைமைகளை ஆராய்வதுடன் ஆலய நிர்வாகத்தினருடன் கலந்துரையாடி, இந்துக்களின் உணர்வுகளை புண்படுத்தும் வகையில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுமாயின் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

# அரகலயவுக்கு புதிய இடம் விரைவில் வழங்கப்படும்!

கொழும்பு, செப். 14

இளைஞர்களுக்கு தமது போராட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக புதிய இடமொன்று விரைவில் வழங்கப்படும் என ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

புறக்கோட்டையில் உள்ள மிதக்கும் சந்தையை ஒட்டிய இடம் விரைவில் அரகலயவுக்கு (போராட்டத்திற்கு ) வழங்கப்படும். இந்த இடத்தில் கலைக் கண்காட்சிகள், இலக்கிய விழாக்கள், தகவல் தொழில்நுட்பம் என்று பல்வேறு வசதிகள் இருக்கும் என்று அவர் கூறினார்

போராட்டங்களில் ஈடுபட்ட இளைஞர்கள் திறமை மற்றும் ஆற்றல் மிக்கவர்கள். அவர்களின் திறன்களை மேலும் மேம்படுத்த இந்த புதிய மையம் உதவும். எனவே இந்த இடத்தை-இந்த நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் விரைவில் கையளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் ஜனாதிபதி விக்கிரமசிங்கவைச் சந்தித்த அரகலய இளைஞர்கள் சிலர், தமது அரகலய போன்றவற்றுக்கு மிதக்கும் சந்தைக்கு அருகில் இடம் ஒதுக்கும் நடவடிக்கையை வரவேற்றதாக அவர் கூறினார். (அ)

## இதய அஞ்சலி

மலர்வு 07 - 09 - 1948



உதிர்வு 13 - 09 - 2022

**கண் மருத்துவ நிபுணர்**
**சரவணமுத்து குகதாசன்**

சிவபூமி அறக்கட்டளையின் நிதிப்பொறுப்பாளரும் எமது அறக்கட்டளையின் வளர்ச்சிக்கு அயராது பணியாற்றியவரும் கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசலையின் அதிபர்

**திருமதி கலைவாணி குகதாசனின்**
கணவருமாகிய
**கண் மருத்துவ நிபுணர் ச.குகதாசன்**

நேற்று (13.09.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஆத்மா சாந்திபெற இறைவனை பிராத்திக்கின்றோம்.

**நிர்வாக சபை,**
**சிவபூமி அறக்கட்டளை.**




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.09.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.